The Good Pastor

நல்ல ஆயன்

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறாடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்." (அரு. 10:11-16.)

புத்தகம் 16. | ஆகஸ்டு 1918. | இலக்கம் 8.

LITURGICAL AND HOMILETIC NOTES.

தேவ சடங்கையும் தேவ வாக்கியத்தையும் பற்றிய குறிப்புக்கள்.

அசனசாலையில் கூடியிருந்த அப்போஸ்தலர்களும் மற்றுமுள்ள விசுவாசிகளும் "இஸ்பிரீத்துசாந்துவினால் நிரப்பப்பட்டார்கள்" (அப்போஸ். நடபடி II. 4) என்று சுவிசேஷகரான அர்ச். லூக்காஸ் வசனித்துள்ளார். இவர்களெல்லோரும் ஞானஸ்நானம் பெற்றபோது இஸ்பிரீத்துசாந்துவைப் பெற்றுக்கொண்டவர்களாவர். அப்போஸ்தலர்களோ வேறொரு தருணத்திலும் இஸ்பிரீத்துசாந்துவைப் பெற்றுக்கொண்டவர்கள். அஃது எப்போதெனில், நமதாண்டவர் அவர்களை நோக்கி: "இஸ்பிரீத்துசாந்துவைப்பெற்றுக்கொள்ளுங்கள். எவர்களுடைய பாவங்களை மன்னிப்பீர்களோ அவர்களுக்கு அவைகள் மன்னிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் எவர்களுடைய பாவங்களை நிறுத்தியிருப்பீர்களோ அவர்களுக்கு அவைகள் நிறுத்தப்பட்டிருக்கும்." (அருளப். XXI. 22, 23.) என்று திருவுளம்பற்றி பாவப்பொறுத்தலளிக்க அவர்களுக்கு அதிகாரங்கொடுத்த அத்தருணத்திலேயாம். ஆனபடியால், அசனசாலையில் கூடியிருந்தவர்கள் இஸ்பிரீத்துசாந்துவை ஏற்கெனவே பெற்றுக்கொண்டவர்கள். ஆயினும், அவர் அவர்கள்மேல் மறுபடியும் பெந்தகோஸ்த் திருநாளன்று இறங்கிவந்தபோது, தம்மைத் தாமே பூரணமாய் அவர்களுக்குத் தந்தருளினாரென்று நமக்குத் தெரியச்செய்ய, அர்ச். லூக்காஸ் "அவர்கள் இஸ்பிரீத்துசாந்துவினால் நிரப்பப்பட்டார்கள்" என்கிறார். ஆனதுபற்றி அசனசாலையிலிருந்தவர்கள் ஏற்கெனவே பெற்றிருந்த தேவ இஷ்டப்பிரசாதத்தோடு இன்னும் அதிக தேவ இஷ்டப்பிரசாதத்தைப் பெற பாக்கியம்பெற்றார்களென்றும், ஞானம், புத்தி, விமரிசை, திடன், அறிவு, பக்தி, தேவபயம் ஆகிய இஸ்பிரீத்துசாந்துவினுடைய ஏழு வரங்களையும் பெற்றுக்கொண்டார்களென்றும் நாம் அறியக்கடவோம்.

*
* *

இஸ்பிரீத்துசாந்துவான சர்வேசுரன் இத்தருணத்தில் அப்போஸ்தலர்களுக்கு சகல பாஷைகளையும் பேச வரத்தை விசே

ஷமாய்த் தந்தருளினரென்று அறிந்து கொள்வோமாக. அதேதெனென்றால், அப்போஸ்தலர் நடபடி II-ம் அதிகாரம். 4-வது வசனத்தில் "இஸ்பிரீத்துசாந்து அவர்களுக்குக் கொடுத்த பேசும் வரத்தின்படியே பற்பல பாஷைகளைப் பேசினார்கள்." என்று சொல்லப்பட்டிருக்கிறது. மானுடர் சர்வேசுரனுக்குப் பிரமாணிக்கமுள்ளவர்களாய் ஒழுகிவந்த வரையிலும் ஒரே பாஷையைப் பேசிவந்தார்கள். ஆனால் அவருடைய கட்டளைகளைப் புறக்கணித்து அவருக்கு ஏற்காத துரோகங்களைக் கட்டிக்கொள்ள அவர்கள் துணிவுகொண்டது முதற்கொண்டு பல பாஷைகள் வழங்கிவர ஏற்பட்டது. பாபிலோன் கோபுரம் கட்டப்பட்ட காலத்தில்தான் உலகத்தில் வெவ்வேறு பாஷைகள் பேசப்பட துவக்கிற்றென்று வேதாகாமத்தில் நாம் காணலாம். (ஆதியாகமம் XI. 1—9.) பாவவினையால் மனுக்குலத்துக்கு பல துன்பங்கள் வந்துற சர்வேசுரனுக்குச் சித்தமானதுபோல, பல பாஷைகளும் அப்பாவத்துக்கு ஆக்கினையாகவே ஏற்பட அவருக்குச் சித்தமாயிற்று. ஆயினும், பெந்தேகோஸ்த் திருநாளுக்காக ஜெருசலேம் பட்டணத்துக்குப் பல ஊர்களிலிருந்து வந்திருந்த பல பாஷைகள் பேசும் பல ஜாதி ஜனங்கள் ஒவ்வொருவரும் தத்தம் பாஷையில் அப்போஸ்தலர்கள் பேசுவதைக் கேட்டு பிரமிப்புக்குள்ளானார்கள். ஒரு குடும்பத்திலுள்ளவர்கள் அனைவரும் எப்படி ஒரே பாஷையைப் பேசித் தங்களுக்குள் ஒருமைப்பட்டிருக்கிறார்களோ, அப்படி சகல ஜாதி ஜனங்களும் விசுவாச ஒற்றுமையிலும், சிநேக பானமையிலும் ஒருமைப்பட்டிருக்க அழைக்கப்பட்டிருக்கிறார்களென்று அப்போஸ்தலர்களுக்கருளின பாஷை வரத்தினால் காட்ட இஸ்பிரீத்துசாந்துவான சர்வேசுரனுக்குத் திருவுளமாயிற்று. இதைக் குறித்து வேதசாஸ்திரியாகிய அர்ச். அகுஸ்தீன் சொல்லியிருப்பதாவது: "ஆங்காரத்துக்கு அஸ்திவாரமும், பிரிவினைகளுக்குப் பிதாவுமாகிய பசாசு ஆதிதொட்டு மனுக்குலம் பேசிவந்த ஏகபாஷையை பாபிலோன் கோபுரத்தண்டையில் பல பாஷைகளாகப் பிரிவுபடச் செய்தது. தம்முடைய அற்புத செயலினால் இஸ்பிரீத்துசாந்துவான சர்வேசுரனோ அசனசாலையில் மறுபடியும் பாஷை ஏகமாகச் செய்தார். சகல ஜாதி ஜனங்களுடைய பாஷைகளைப் பேச அப்போஸ்தலர்களுக்கு ஏன் வரமளிக்கப்பட்டதென்றால், மனுக்குலத்தின் கூட்டுறவுக்கும் அன்னியோன்னியத்துக்கும் பாஷையே காரணமாயிருப்பதினாலேயாம்" என்பதே.

* * *

பாஸ்கா பண்டிகைமட்டிலும் பெந்தேகோஸ்த் பண்டிகைமட்டிலும் விசேஷ பக்தியுள்ளவர்களான இஸ்ரயேலரும், வேதத்தை யனுசரித்துவந்த புறத்தி ஜாதியாரும் பற்பல தூரதேசங்களிலிருந்து கூட்டங்கூட்டமாய் ஜெருசலேம் பட்டணத்துக்கு வந்து, அங்கே யிருந்த தேவாலயத்தில் சர்வேசுரனுக்குப் பலிபதார்த்தங்களையும் நைவேத்தியங்களையும் சமர்ப்பித்து, அவரை ஆராதித்து வணங்கிவிட்டுப் போவார்கள். சிலரோ தங்கள் சுயநாட்டுக்குத் திரும்பிச் செல்லாமல் தேவாலயத்தினருகில் வசிப்பது தங்களுக்குப் பாக்கியமென்றெண்ணி அங்கேயே தங்கிவிடுவார்கள். ஆகையாலல்லவா அர்ச். லூக்காசும் "அந்நாட்களில் வானத்தின் கீழிருக்கிற சகல தேசங்களினின்று வந்த பக்திமான்களான யூதர்கள் ஜெருசலேமில் வாசம்பண்ணிக்கொண்டிருந்தார்கள்" (அப்போஸ். நடபடி II. 5.) என்கிறார்? மேலும் இவர் சொல்லியிருக்கிறபடி பெந்தேகோஸ்த் திருநாளுக்காக மனுக்குலத்தின் மூன்று பெரிய கும்பங்களாகிய சேம், காம், ஜாபெத் ஆகிய இவர்கள் மூவருடைய வங்கிஷங்களிலுமிருந்து ஜெருசலேம் பட்டணத்துக்குத் திரளான பேர் வந்திருந்தார்கள். இவர்கள் ஒரே பாஷையைப் பேசுகிறவர்களல்ல; பல பாஷைகளைப் பேசுகிறவர்கள். ஆனபடியால், இவர்கள் தத்தம் சுய பாஷையில் அப்போஸ்தலர்கள் பேசுவதைக் கேட்டு ஆச்சரிய பிரமிப்படைந்து ஒருவரோடொருவர் "இதோ! பேசுகிற இவர்களெல்லோரும் கலிலேயா தேசத்தாரல்லவோ? அப்படியிருக்க, நம்முள் ஒவ்வொருவரும் நமது செனம பாஷையில் அவர்கள் பேசக் கேட்பதெப்படி?" என்பார்கள். அர்ச். இராயப்பர் அவர்களுக்குச் செய்த பிரசங்கத்தில் இஸ்பிரீத்துசாந்துவானவர் இறங்கிவந்த அற்புத மேரையைப்பற்றி வியாக்கியானித்துக்காட்டினதுமல்லாமல்,

பாடுபட்டு மரித்த நமது கர்த்தரைப்பற்றியும் முதல்விசையாக அவர்களுக்கு அறிவித்தார். உடனே மூவாயிரம்பேர் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றார்கள். இவர்களே திருச்சபையின் முதல் பலன் ஆவர். அந்நாள் முதற்கொண்டு இந்நாள் வரையிலும் திருச்சபையானது உலகத்தின் எத்திசையிலும் பரவிவருகின்றது. நம் இந்தியா தேசத்திலும் பரவிவருகின்றதென்பதற் காட்சேபனையில்லை. ஆயினும் இஃது இந்தியாவில் அவ்வளவு திருப்திகரமானதாயில்லை. அதேனெனில், இந்தியாவின் ஜனத்தொகை 29-கோடியே 40-இலட்சம். இத்தனை பேருக்குள் கத்தோலிக்கர் 24-இலட்சம்பேரே யாவர். இன்னும் 29-கோடியே 16-இலட்சம்பேர் சத்திய வேதத்தில் சேராதிருக்கிறார்கள். ஆகையால், நாம் எல்லோரும் இவர்களுடைய மனந்திரும்புதலுக்காக அல்லும்பகலும் வேண்டிக்கொள்வதோடு, நம்முடைய நன்னடத்தையினாலும் நன்மாதிரிகையினாலும் நம்முடைய சத்திய வேதத்துக்கு அத்தாட்சிகாண்பிப்போமானால் அதைக்கண்டு அநேகர் மனந்திரும்பி திருச்சபையிற் சேர ஏதுவாகும்.

INDIAN WOMEN & SOCIAL LIFE.

இந்திய ஸ்திரிகளும் கூட்டுறவாடுதலும்.

(Communicated.)

இவ்வுலகில் மானிடர் ஒருவர் மற்றொருவருடைய உதவியை நாடினவர்களாய் ஒருமித்துக்கூடி வாழுந்தன்மையுடையவர்கள். இத்தன்மையில் அவர்கள் வேண்டும் வேண்டாமென்றாலும் தங்கள் அயலாருடன் கலந்து உறவாடவேண்டியவர்களாயிருக்கிறார்கள். "யாதாமொருவன் ஏகாந்தத்தில் இன்பங்கொள்வானானால், அவன் ஓர் காட்டு மிருகத்துக்குச் சமானமானவன் அல்லது யோகியாவான்" என ஓர் கிரந்த கர்த்தா வரைந்திருக்கிறார். சிங்கம் புலிபோன்ற சிற்சில மிருகஜாதிகளே தவிர மற்றெல்லா மிருகங்களும், ஊர்வன பறப்பன முதலிய சகல ஜீவஜந்துக்களும் தத்தம் இனத்தோடு கூட்டமாய்க் கூடிவாழ்கின்றன. இத்தகைய கூட்டுறவு வாழ்க்கையே எல்லா ஜீவராசிகளுக்கும் உரிய தெய்வ நியமனமாகும். மானிடராசிக்கு இவ்விதியினின்றும் விலக்கு கிடையாது.

பூர்வகாலத்தில் மானிடர் யாவரும், புருஷருஞ் சரி ஸ்திரிகளுஞ் சரி பொதுஜன சங்கமாய்க் கூடி வாழ்ந்துவந்தார்கள். பிற்காலத்திலும் நாகரிகமுற்ற நாடுகளெங்கும் இவ்வாறே நடந்துவருகிறது. ஆனால் இவ்விந்தியநாட்டில் ஜனங்கள் எக்காரணம்பற்றியோ வெகுகாலமாய் பொதுஜனசங்க நடமாட்டமின்றி பிரத்தியேகமாய் ஜீவித்துவந்திருக்கிறார்கள். சுபாசுப காலங்களில் மாத்திரம் நெருங்கின பந்துக்கள் காரியங்கள் முடிவுபெறுமட்டும் கூடியிருந்து பிரிந்துபோவதே தவிர, ஒரு ஊரிலுள்ள பற்பல வகுப்பினரெல்லோரும் ஒருங்குகூடி ஜனசங்கக் கொண்டாட்டங்கள் நடத்திவந்ததாகத் தெரியவில்லை. இதற்குக் காரணம், இத்தேசத்தின்மேல் அடுத்தடுத்து அந்நியதேசத்து அரசர்கள் படையெடுத்து வந்து இதைக் கொள்ளையடித்துக் கோலாகோலப்படுத்தினதேயென ஒருவாறு கூறலாம். நாடு கலக்கமுற்றிருக்குங் காலத்தில் ஜனங்கள் கூட்டுறவாடிக் குதூகலிப்பதெங்ஙனம்? ஆயினும் ஆங்கிலேய அரசாட்சி நிலைத்து, அமைதியும், சமாதானமும், திருப்தியும், கல்வி, நாகரிகம் முதலிய மேம்பாடுகளுங் கிடைக்கப்பெற்ற இக்காலத்தில் புருஷர்கள் ஒருவாறு கூட்டமாய்க் கூடி உறவாடி நலம்பெற்று வருகிறார்கள். இவர்களுக்குள்ளும் இன்னுங் கூட்டுறவாடல் போதியவாறு விருத்தியடையவில்லை யென்பதே பொதுஜனாபிப்பிராயம். ஆனால், இவ்விஷயத்தில் ஸ்திரிகளின் நிலைமை மிக்க பரிதாபத்துக்குரியதாயிருக்கிறது. நமது இந்திய ஸ்திரிகள், விசேஷமாய் கத்தோலிக்கு இந்திய ஸ்திரிகள் கூட்டுறவின்றி, சற்ஜனசகவாசமின்றி, கல்வியபிவிருத்தியின்றி, அறிவைப் பெருக்காது அல்லும்பகலும் அடுப்பங்கரையில் அடைபட்டு அறியாமையிற் ஜீவிக்கிறார்கள். ஜெபபுஸ்தகம் முதலிய சிற்சில புத்தகங்களை ஒருவாறு தட்டித்தடுமாறிப் படிக்கவும், யாதோர் அவசரநிமித்தம் கடிதமெழுத வேண்டுமானால், முந்நூறு பிழைகளுடன் எழுதவு மாத்திரம் அவர்களுக்குத் தெரியும். மேலும், கடன்பட்டாவது உடன்பட்டாவது நகைகட்டுகளைச் செய்து, காதிலுங் கழுத்திலும், காலிலும்

கையிலும் மாட்டிக்கொள்ளவும், தினுசுக்கோர் புடவை வாங்கிக் கட்டிக்கொள்ளவும் தெரியும். மற்றபடி தங்கள் வீட்டுக்கு வெளியே, ஊரில் நாட்டில் நடப்பதென்ன, ஜனங்களின் நிலைமை யென்ன, ஒழுக்கமென்ன, நாகரிகமென்ன, நாடுகளின் நவீனத்தேர்ச்சி யென்னவென்று தெரியாது. நல்ல அறிவு, நல்லொழுக்கம், இலௌகிக ஞானம், அநுபோக முதலிய மேம்பாடுள்ள சற்ஜனக்கூட்டத்தில் நடமாடி யறியார்கள். தேசாபிமானம், ஐக்கியம், பொதுநலப்பிரியம் என்பன தெரியா. ஒரு மானிடனுக்கு தன்மட்டிலும், தன் அயலான்மட்டிலும், தன் தேசத்தார் மட்டிலும் முறையே கடமைகள் உண்டு என அறியார்கள். அவைகளைப்பற்றிச் சொன்னாலும் அவர்கள் உணரார்கள். அவர்களது அறிவும் அநுபோகமும் அவர்கள் வீட்டளவேயாகும். அவர்களுக்கு அறிவுக்குறுக்குமே யன்றி அறிவு விசாலங்கிடையாது. விஷயாவிஷயங்களை நன்கறிந்த புருஷர்கள் தேசாபிவிருத்தியைப்பற்றியாவது, பரோபகாரத்தை யொட்டியாவது யாதோர் பொதுநலக் காரியத்தைத் தொடங்கிச் செய்வதற்கு, ஸ்திரீகள் ஒற்றுமையாயிருந்து உதவிபுரிவதற்குப் பதிலாக, அதற்கு அவர்கள் பெரிய இடையூறாய் நிற்பார்கள். கால் என்றால் தலை யென்பார்கள். தலை யென்றால் கால் என்பார்கள். ஏறு என்றால் மாறு செய்வார்கள். விஷயங்களை விளக்கிச் சொன்னால் அவைகளைத் தெரிந்து கொள்ள அவர்களுக்குப் போதுமான ஞானமுமில்லை, அநுபோகமுமில்லை. ஆயினும், தங்களுடைய இத்தகைய நிலைமைக்கு ஸ்திரீகள் ஒரு போதும் உத்தரவாதிகள் அல்லர். இவ்விஷயத்தில் முழுதும் அவர்கள் நிரபராதிகள் என்றே சொல்லல்வேண்டும். இவர்களை இத்தன்மையான கேவலஸ்திதிக்குக் கொண்டுவந்தவர்கள் புருஷர்களேயாவர். புருஷர்களே அவர்களை இக்கதியாக்கிவிட்டவர்கள். ஸ்திரீகளுக்குக் கல்விகற்பித்தால் கர்வங்கொண்டு புருஷர்களை மதிக்கமாட்டார்களென்றும், பெண்கள் படித்தாவதென்ன, உத்தியோகஞ் செய்யப்போகிறார்களாவென்றும் வீண் குதர்க்கங்கள் பேசி, அவர்களை அடிமைகளைப்போலப் பாவித்து நடத்திவருகிறார்கள். பின்னும் அவர்களை ஏசிப்பேசி இகழ்வது எங்ஙனம்? தன் பிள்ளையை இளமையிற் படிக்கவைக்காமல் ஆடவிட்டுவிட்டு, அவன் வளர்ந்தபிறகு மாடுமேய்க்கவோ மண்சுமக்கவோ புகுவானானால் அவனைத் தகப்பன் "அடே மாட்டுக்கார பையா, மண்சுமந்த பையா" வென்று ஏசுவானானால் அவனை யென்னென்று சொல்வோம்? அவனையே திருப்பிக்கொண்டு "நீதான் மாட்டுக்கார பையல், நீயே மண்சுமக்கிறவன்; ஏனெனில், நீ யப்படிப்பட்ட தன்மையனாயிருந்தபடியால்தான் உன் பிள்ளையையும் அக்கதியாக்கிவிட்டாய்" என்று சொல்வோமல்லவா? அவ்வாறேபோல். சிருஷ்டியிலேயே ஆண்களுக்கு அடக்கமான பெண்கள் படியாத குறை ஆண்பிள்ளைகளுடையதேயன்றி கிஞ்சித்தும் பெண்பிள்ளைகளுடையது அல்லவேயல்ல. பெண்களுக்குத் தாராளமாய் கல்வி பயிற்றுவித்து, அவர்களுக்கு ஆண்பிள்ளைகளுக்குப்போல பல சுவாதீனங்களைக் கொடுப்போமானால், பிரதமத்தில் அவர்கள் பல தவறுகளுக்குள்ளாவார்களென்பது மெய்யே. ஆயினும் நாளாவட்டத்தில் அவர்கள் புத்தித்தெளிவும், அறிவு முதிர்ச்சியுமடைந்து, ஒழுக்கத்தில் உயர்ந்து, ஆண்மக்களுக்குச் சமானமான தோழர்களாவார்கள் என்பதற்கோர் ஐயமில்லை. ஆகவே, நம்மவர்கள் மற்றைய வகுப்பினர்களைப்போல் நாகரிக முதிர்ச்சியுற்று முன்னுக்குவர வேண்டுமானால், லௌகிக நன்மைகள் பல பெற்று நன்குவாழ வேண்டுமானால், நாம் நமது ஸ்திரீகளுக்கு விஸ்தாரமாய் கல்வி பயிற்றுவிக்கவேண்டும். அவர்களை அடுப்பங்கரை ஜெயிலிலிருந்து அப்புறம் அகற்றவேண்டும். அவர்களைத் தட்டுத்தடையின்றி வெளியில் வந்து நடமாட விடவேண்டும். மற்றையோரிடம் தாராளமாய்க் கூட்டுறவாட விடவேண்டும். இதனால் அவர்கள் கெட்டுப்போகமாட்டார்கள். "அரைக்காத்தான் பெண்டிழந்தான்" என்பது போலவும், "சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர் நிறைகாக்குங் காப்பே தலை" என்பது போலவும், கட்டுப்பாட்டினால் அதிக கெடுதி விளையுமே தவிர சுயாதீனத்தினால் அதிக கெடுதி விளையாது.

"கண்ணிரண்டே யாவர்க்குங் கற்றோர்க்கு மூன்று விழி" என்பதுபோல கல்வியறிவினாலுண்டாகும் மூன்றாவது கண்ணை புருஷர்கள் ஸ்திரீகளுக்குத் திறந்துவிடுவார்களானால், அக்கண்ணைக்கொண்டு ஸ்திரீகள், இலௌகிக பாதையிலுள்ள கல்கரடு, முள்முரடு, பள்ளம்படுகுழி முதலிய ஆபத்துக்களைக் கண்டு விலகி நன்னெறியில் ஒழுகுவார்கள். புருஷர்கள் ஸ்திரீகள்மேல் சாட்டுகிற குற்றங் குறைகளுக்கெல்லாம் காரணம் அறிவின்மையேயன்றி வேறென்ன?

ஆகவே, அறிவுக்கு ஆதாரமாயிருக்கிற கல்வியை ஸ்திரிகளுக்கு, புருஷர்களுக்குப்போலவே புகட்டிவிட்டால், ஸ்திரிகள் புருஷர்களைவிடக் கேவலமாய் நடவார்கள் என்பதற்கு ஆட்சேபனையிராது.

SISTER MARY ASSUNTA.
மரி அசுன்தா சகோதரி.

(மரியாயின் பிரான்சிஸ்கன் மிஷனரி கன்னிகை.)

1878—1905.

(முன் தொடர்ச்சி.)

பிரயாணத்துக்கு முஸ்திப்பு செய்ய அசுன்தா ரோமாபுரிக்கு உடனே அனுப்பப்பட்டாள். கப்பல் யாத்திரையிலும் தொலை தூரமான மிஷன்களிலும் தனக்குத் துணையாகவும், தோழிகளாகவும் இருக்கப்போகிற மற்றக் கன்னியரை அங்கு கண்டாள். பரிசுத்த பிதாவாம் பாப்பானவரைத் தரிசித்து சம்பாஷிக்க பாக்கியம் பெற்றதினால், அவர்களெல்லோரும் சந்தோஷ வெள்ளத்தில் அமிழ்ந்தினார்கள். பத்தாம் பத்திநாதர் அவர்களை ஆசீர்வதிக்கும்போது, அவர்களுக்கு அநேக துன்ப சோதனைகளும், நெருக்கிடைகளும் உண்டாகுமென்று நினைப்பூட்டினார். அப்போது பிரான்சிஸ்கன் மிஷனரி கன்னியர்களில் ஒருவள், பரிசுத்த பிதாவின் திருநாளன்று (அதாவது:—மார்ச்சு மாதம் 19-ம் தேதி) தாங்கள் கடற் பிரயாணம் செய்யப்போவதினால், தங்களுக்கு அது அனுகூலமாயிருக்குமென்று தாங்கள் எண்ணுவதாகவும், அது எப்படியிருந்தபோதிலும் திருச்சபையின் மகிமைக்காகவும், பரிசுத்த பிதாவாகிய பாப்பானவருடைய சுகக்ஷேமத்துக்காகவும், தங்களுடைய பரித்தியாகங்களை ஒப்புக்கொடுப்போமென்றும் கூறினாள். இந்த நீடிய கடல் யாத்திரையின்மட்டில் அசுன்தா சகோதரிக்கிருந்த சிந்தனைகள், அவள் பிளோரென்ஸ் மடத்தாருக்குக் கபடற்றவிதமாய் எழுதியனுப்பிய கடிதத்தில் வெளியாகின்றன. அது பம்பாயில் 1904-ம் வருஷம் எப்ரல் மாதத்தின் துவக்கத்தில் எழுதப்பட்டிருக்கவேண்டுமென்று யூகித்துக்கொள்ளலாம்.

“கனம் பொருந்திய என் பிரிய தாயாரே, சகோதரிகளே, நாங்கள் இப்போது கப்பலை விட்டு கரையிலிறங்கியிருப்பதினால், சிற்சில சங்கதிகளை உங்களுக்கு எழுதக்கூடுமாயிருக்கிறது. நாங்கள் மார்ச்சு மாதம் 19-ம் தேதி காலையில் ரோமாபுரியை விட்டுப் புறப்பட்டு, அன்று சாயந்திரமே அர்ச். சூசையப்பருடைய அடைக்கலத்தில் எங்களை ஒப்புவித்து, கப்பல் ஏறினோம். நான் முதல் விசையாக சமுத்திரத்தைக் கண்டபோது, நல்ல மனதுடன் உத்தமமனஸ்தாப மந்திரம் சொல்லிக்கொண்டேன். புகைக்கப்பலுக்கு எங்களை யேற்றிச்சென்ற சிறிய படகில் நான் உட்கார்ந்த சமயத்தில், அர்ச். அந்தோனியாருடையவும், அர்ச். பிரான்சிஸ்குடையவும் படங்களை என் கையில் பிடித்துக்கொண்டு, அவர்களிடம் என்னை ஒப்புக்கொடுத்தேன். முதல் நாள் (பகல்) கப்பலில் நாங்கள் சுகமாயிருந்தோம். மாலையில் ஓர் மாற்றம் உண்டாகவே ஒரு நொடிக்குள்ளாக நாங்கள் எல்லோரும் நோய்க்கு இலக்கானோம். நான் பிரமித்துபோனேன். ஏனெனில், சமுத்திரத்துக்கு இப்பேர்க்கொத்த செயலுண்டென்று எனக்குத் தெரியாது. மறுநாள் காலை நான் எழுந்திருக்க முயன்றபோது, என் பாதங்களை ஊன்றி வைக்கக்கூடுமாயில்லை. என் தலை மயக்கத்தினால் கிறுகிறுப்புகொண்டது. கப்பலோ ஒரே சமயத்தில் எல்லா பக்கமும் சுற்றிச் சுழன்றது. ஆகையால், நான் என் சிற்றறைக்குச் சென்று, சாப்பிடவும், அசையவுங் கூடாமல் அநேக தினங்கள் அங்கேயேயிருந்தேன். பிறகு கடல் அமரிக்கையானதும் சுத்த ஆகாயத்தைச் சுவாசிக்கக் கப்பலின் மேற்றளத்திற்குச் சென்றோம். இப்போது நாங்கள் இந்தியாவிலிருக்கிறோம். சிலுவைச் சகோதரிகள் என்றழைக்கப்படும் கன்னியர் மடத்தில் தங்கியிருக்கிறோம். அவர்களுக்கு ஒரு அநாத பிள்ளைகளின் மடம் உண்டு. அவர்கள் மெத்த நன்மை செய்கிறார்கள்.

அரைகுறையாய் உடுத்தியிருக்கும் இந்த ஜனங்களைப்பார்க்க மெத்த விந்தையாயிருக்கிறது. இங்கு கொள்ளைநோய் இருக்கிறபடியால், நாங்கள் ஒரு முறைதான் வெளியே சென்றோம். நாங்கள் இவ்விடத்திலுள்ள ஓர் மலைமேல் ஏறினபோது அங்கு கொம்புகளாலும் கொடிகளாலும் செய்யப்பட்ட ஒரு சிறிய குடிசையில் சிவப்பு

வர்ணம் பூசப்பட்ட கற்களும், புஷ்பங்களுமிருக்கக் கண்டோம். அந்தக் குடிலை அவ்விடத்திய ஜனங்கள் தங்கள் கோவிலென்றும், அக்கற்களைத் தங்கள் தெய்வம் என்றும் சொல்லுகிறார்கள். நான் இதை நம்புவது பிரயாசையாயிருந்தது. ஆனால் 4-பேர் இந்துக்கள் இக்கற்கள் ஒன்றின் முன்பாகவந்து, தங்கள் நெற்றியைச் சிவப்பு வர்ணத்தைலத்தால் பூசிக்கொண்டு, தரையை முத்தம்செய்து, சாஷ்டாங்க தெண்டனிட்டு நமஸ்கரித்தார்கள். இக்காரியங்களைக் காண்பதே கஸ்திக்குரியதாயிருந்தது. ஜனங்கள் இந்தக் கற்களை எவ்வளவு பக்தி விநயத்துடன் ஆராதிக்கிறார்கள் என்று கண்டு, நாமும் பக்தியும், வேகமும், உற்சாகமும் கொள்ள நம்மைத் தூண்டிக்கொள்ளவேண்டும். நாமும் நமதாண்டவரை இப்படி ஆராதிக்கவும் எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறோம்! எப்ரல் மாதம் 16-ம் தேதி திரும்பவும் எங்கள் கப்பல் பிரயாணத்தைத் தொடங்குவோம். டாக்டரை அதற்குமுன் கொள்ளை நோயின் நிமித்தமாக முந்தமுந்த காணவேண்டும். எங்கள் கடற்பிரயாணகாலத்தில் எனக்காகவேண்டிக்கொண்ட சகோதரிகளுக்கு நன்றி செலுத்துகிறேன். அவர்கள் எல்லோரும் அர்ச்சியசிஷ்டவர்களாகும்படியாக நானும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

சகோதரிகளுக்கு நான் கொடுத்த துர்மாதிரிகைக்காக எனக்குப் பொறுத்தல் அளிக்கும்படி சிரேஷ்டதாயாரை மன்றாடுகிறேன். இன்னும் ஒருவிசை என்னை ஆசீர்வதிக்க அவர்களை மன்றாடுகிறேன். எல்லோருக்கும் என் வாழ்த்துதல்.

இப்படிக்கு,

உமது மிகவும் பட்சமுள்ள சகோதரி,

மரி அசுன்தா."

மிஷனரி கன்னியர் மறுபடியும் 46-நாள் கப்பல் யாத்திரை செய்தபின், கடைசியாய் ஷெப்பு (Chefoo) என்ற நாட்டில் வந்திறங்கினார்கள். அங்கு அநேக வாரங்கள் தங்கி இளைப்பாறினார்கள். பிறகு தங்களுக்குக் குறிக்கப்பட்ட ஸ்தானங்களுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அசுன்தா சகோதரிக்கு நியமிக்கப்பட்ட இடம், சீனதேசத்தின் வடக்கேயுள்ள தொலைதூரமான ஷான்சி (Shansi) என்னும் நாடு. இந்தப் பிரயாணத்தில் அசுன்தா சகோதரியுடன் சென்ற சிரேஷ்ட தாயார், அவளைப்பற்றி பின்வருமாறு எழுதியிருக்கிறார்கள் :—

"பிரயாணம் தொடங்குகிறதற்கு முந்தி அசுன்தா சகோதரியை அவ்வளவாய் நான் அறிந்ததில்லை. 4-மாதங்களாக நாங்கள் செய்த நீடிய பிரயாணத்தில் எல்லா சந்தர்ப்பங்களிலும், அவள் ஓர் உத்தம துறவியைப்போல் நடந்துகொண்டாள். அவள் எவ்வளவு தாழ்ச்சியும் மௌனமுமுள்ளவளாயிருந்தாள் என்றால், மற்றச் சகோதரிகள் இவளிடத்தில் விளங்கிய வியப்புக்குரிய உத்தமதனத்தைக் கண்டுகொள்ளவில்லை. நாங்கள் தரையிலும் கடலிலும் செய்த பிரயாணத்தில் பட்ட பல இடையூறு இக்கட்டுகளில் அவள் சதா ஒருகண்ட சீராயும் சந்தோஷமாயமிருந்தாள். தை யூயியென் பூ (Tai-uien-fou) என்னும் ஊருக்குப்போய்ச் சேர நாங்கள் நாற்காலிகள்மீது ஏறிக்கொண்டு 8-நாள் வரையில் மெத்த கடினமான பிரயாணம்செய்யவேண்டியிருந்தகாலத்தில் முதலாய், அவள் கொஞ்சமும் முறையிட்டாள் என்று நான் கேள்விப்பட்டதில்லை. சுருக்கிச் சொல்லவேண்டுமானால், மரி அசுன்தா சகோதரியின் நடத்தை முற்றிலும் புண்ணிய சங்கோபாங்கமுள்ளதா யிருந்ததென்றும், தன்னுடைய மாறாத நளின உல்லாசத்தாலும், கபடற்றதனத்தாலும் அவள் மெத்த பிரியமுள்ள தோழியாக விளங்கினாளென்றும் கூறலாம்."

சீனதேசத்தின் சேய்மையான பாகங்களிலுள்ள ஷான்சி என்னும் நாடு கடந்த நூற்றாண்டுகளில், பிரான்சிஸ்கன் குருசுவாமிமார்களால் சுவிசேஷம் போதிக்கப்பெற்று, 18-ம் நூற்றாண்டின் இறுதியில் அப்போஸ்தோலிக் விக்காரியரின் விசாரணைஸ்தானமாக ஏற்படுத்தப்பட்டது. மரியாயின் மிஷனரி கன்னியர் தங்கள் சபை குருக்களுக்கு ஒத்தாசை புரியவும், முதல் முதல் அவர்கள் செய்துவந்த கடும் உழைப்பிலும், வேதசாட்சி பட்டத்தின் கிரீடத்திலும் அவர்களுடன் பங்கடையவும் 1898-வருஷம், தை-யு-யியென்பு என்னும் ஊருக்குச்சென்றார்கள். 1900-வருஷம் நிகழ்ந்த பாக்ஸர் (Boxer) வேத கலாபனையில் மரியாயின் பிரான்சிஸ்கன் கன்னியரின் சரித்திரம் மகிமையுள்ள சம்பவத்தால் பிரபல்லியமடைந்தது; எனெனில் அச்சபையைச்சார்ந்த ஏழு கன்னியரும், மேற்றிராணிமார் இருவரும், குருக்கள் அனேகரும், பலநூறு கிறீஸ்துவர்களும் சத்தியவேதத்துக்குச் சாட்சிகளாகத் தங்கள் இரத்தத்தைச் சிந்தினார்கள்.

வேதகலாபனை நீங்கி திரும்பவும் அமரிக்கை யுண்டானதும் ஷான்சி என்னும் கத்தோலிக் மிஷன், திருச்சபை பாழாக்கப்பட்ட பழய ஸ்தலங்களில் புதிதாய்க் கிளம்பினது. மரித்த மிஷனரிகளின் ஸ்தானங்களில் போய் உழைக்க புது குருப்பிரசாதிகளும் கன்னியரும் அனுப்பப் பட்டார்கள். அங்கு மரி அசுன்தா சகோதரியும், அவளுடைய தோழிகளும் வந்துசேர்ந்தார்கள். சேர்ந்ததும் வெகு ஊக்க உற்சாகத்துடனும், தளரா நம்பிக்கையுடனும் தங்கள் வேலைகளை ஆரம்பித்தார்கள். அசுன்தா சகோதரி ஜூன் மாதம் வந்திறங்கினாள். மறுவருஷம் எப்ரல் மாதம் பரமபதவியடைந்ததால், இந்திய மிஷன் களில் அவள் ஜீவித்ததெல்லாம், 9-மாதங்கள் தான். ஆனால் இந்தச் சொற்பகாலத்தில் அவளை அறிந்த சகலரும் அவளைப் பெரிதும் மதித்துப் போற்றவும், அவள்பேரில் ஓர்வித வணக்கத் தைக் காண்பிக்கவும், அவளை நேசிக்கவுந் தலைப் பட்டார்கள். அவள் வியப்புக்குரிய அசாதாரண காரியங்களைச் செய்தவளல்ல. அவளுடைய சீவியத்தில் மற்றவர்கள் கண்களுக்குப் பகட் டாய் விளங்கக்கூடியது யாதுமில்லை. ஆனால், அவளுடைய புண்ணியம் எவ்வளவு சிரேஷ்டம் பெற்றதென்றால், அதனை ஒளிக்கக்கூடுமா யில்லை. துவக்கத்திலிருந்தே அவள் சமையற் கூடத்தில் வேலைசெய்யும்படியாகக் குறிக்கப் பட்டாள். அவளுக்கு ஒத்தாசையாக ஒரு சீன ஸ்திரியும் கூட இருந்தாள். மிஷன்களில் மிக வும் பிரயோசனமுள்ளவளாகும் பொருட்டு சீன பாஷையைக் கற்றுக்கொள்ள அப்பியாசம் செய் தாள். ஐரோப்பாவில் அவள் சீவித்த விதத்துக் கும், சீனாவில் நடந்துகொண்ட விதத்துக்கும் மெத்த வித்தியாசம் கிடையாது.

"அவள் தன் வேலையில் ஜாக்கிரதையாயும் எல்லோர்மட்டிலும் பிறர்சிநேக முள்ளவளாயு மிருந்தாள். மற்றவர்களுக்கு உதவிபுரிய அவள் ஒருபோதும் மறுத்தவளல்ல; தான் மகாபெரிய பாவியென்றும், சகலராலும் மிதிபடப் பாத்திர முள்ளவளென்றும் நம்பினாள். சபைக்குத் தான் துர்மாதிரிகைகளைக் காட்டினதாக எண்ணி தன் பேரிலேயே குறைகூறி தன்னைத்தாழ்த்திக் கொள்வாள். உண்மையாகவே அவளுக்கு மெத்த நுட்பமான மனச்சாட்சியிருந்தது. நமதாண்ட வருக்கு யாதொரு குற்றத்தால் மனநோகப்பண் ணவாவது, ஒழுங்கைமீறி நடக்கவாவது பயப்பட் டாள். இதினிமித்தம் சரீர தபமுயற்சிசெய்ய ஓயாமல் உத்தரவுகேட்பாள். எல்லா சந்தர்ப்பங் களிலும் தேவ கிருபையில் அளவற்ற நம்பிக்கை யைக் காட்டினாள். தன் தோழிகளை நேசித்தாள். தன்னைச் சுற்றிலும் அஞ்ஞான அந்தகாரத்தில் உழன்று திரிந்த ஆத்துமங்களை இரட்சிக்க மனப் பூர்வமாய் தன் உயிரைப் பலியாக்க சித்தமா யிருந்தாள்.

அவள் சொந்த கையால் வரையப்பட்ட பின் வரும் குறிப்புக்கள் அவள் மரித்தபின் கண்டெ டுக்கப்பட்டன. இவைகள் பக்திச் சுறுசுறுப்பை புதுப்பிக்கும் ஞான ஒடுக்கக் காலங்களில் அவள் எழுதிக்கொண்ட பிரதிக்கினைகள், தீர்மானங் கள், ஞாபகக் குறிப்புக்களாம். மேலும் இவைகள் சர்வேசுரனோடு அவளுக்கிருந்த மேலான ஐக்கிய பந்தனத்தையும், தன் கிருத்தியங்களுக்கெல் லாம் ஆதாரமாயிருந்த அவளுடைய தாழ்ச்சியை யுங் காண்பிக்கின்றன.

"அர்ச். பெர்க்மன்ஸ் அருளப்பரை எனக்கு மேல்வரிச் சட்டமாக வைத்துக்கொண்டு, சர்வே சுரனுடைய அருளாலும், அர்ச். கன்னிமரியா யின் வேண்டுதலாலும் நான் பின்வரும் பிரதிக் கினைகளைச் செய்கிறேன்:—

என்னைப் புண்ணியவதியாக்கிக்கொள்ளும் படியாகத் துறவறச் சபையில் பிரவேசித்தேன். என் கதியைச் சிந்தியாமல் இருப்பேனாகில் அதிக காலம் சீவிப்பதில் வரும் பயன் என்ன? என் ஆத்துமத்துக்கு பூலோக முழுவதுமே பிரயோ சனப்படாது.

நான் ஞான வர்த்தகியாயிருப்பேன். சேசு நாதர் என்னைத் துறவற அந்தஸ்துக்கு அழைத்த தில் எனக்களித்த வரப்பிரசாதத்தை எப்போ தும் ஞாபகப்படுத்திக்கொண்டு மெத்த பேரன்பு கொண்ட வர்த்தகியாயிருப்பேன்.

பாவதோஷங்களால் நிறைந்து நரகாக்கி னைக்குப் பாத்திரமான அயோக்கிய சிருஷ்டி நான்.

நான் கிறீஸ்துவ குடும்பத்தில் பிறக்கும்படி யாகச் செய்தருளிய சர்வேசுரனுக்கு நன்றி செலுத்துகிறேன். என் ஞானஸ்நான வார்த் தைப்பாடுகளை அடிக்கடி புதுப்பிப்பேன். நம தாண்டவர் எனக்குத் துறவற அழைப்பின் வரத் தைக் கொடுத்தபோது, நான் ஒரு அடிமை வேலைக்காரியாக வென்கிலும் துறவறச் சபை யில் பிரவேசிக்க விரும்பினதை எப்போதும் ஞாபகப்படுத்திக்கொள்வேன். அதற்குப் பதி

லாக இந்த மகத்தான துறவறச் சபையில் சேசுநாதர் என்னை அன்பாய்ச் சேர்த்தருளினார்.

நான் பரிக்ஷை யந்தஸ்திலிருக்கும்போது, கீழ்ப்படிதலால் அநேக சோதனைகளை நான் ஜெயிக்கவும், பரிசுத்த உடையைத் தரிக்கவும் நமதாண்டவர் அநுக்கிரகம் செய்தார். நவகன்னிகையாயிருந்தபோது நான் மெத்த பலசாலியாயிருந்ததில்லை. எனினும், உலக வாழ்க்கைக்கு நான் அனுப்பப்பட்டேனில்லை. நான் வார்த்தைப்பாடு கொடுக்கக் கேட்காவிட்டாலும், எனக்கு உத்தாரம் அளிக்கப்பட்டது. என் அபாத்திரத்தைப் பாராமல் சேசுநாதர் என்னைத் தம்முடைய பத்தினியாகச் செய்தாரென்று, அவருடைய நன்மைத்தனத்தில் மாத்திரம் நம்பிக்கையாயிருந்தேன். கனம் பொருந்திய அலெக்சாண்டர் தாயாருக்கு நான் காட்டிய கீழ்ப்படிதலினால், அநேக சோதனைகளை ஜெயிக்க எனக்கு வரமளித்தார். என்னுடைய கடைசி வார்த்தைப்பாடுகளால், அவர் என்னை என்றென்றைக்கும் தம்முடைய பத்தினியாகச் செய்தார். நான் அவரைச் சிநேகிக்கவும், அவருடைய சித்தத்தை நிறைவேற்றவும் மாத்திரம் சிந்தையாயிருந்ததினால், அவர் என் அபாத்திரத்தைப் பாராமல் சீனா தேசத்தின் மிஷனுக்கு என்னை அனுப்ப பெரிதுந் தயைகூர்ந்தார்.

நான் விரும்பினவெல்லாவற்றையும் சேசுநாதர் எனக்கு அளித்தார். அவர் இன்னு மதிகமாய்ச் செய்யக்கூடியது உண்டு என்று நான் நினைக்கவில்லை. நான் இத்தனை வரப்பிரசாதங்களுடன் ஒத்துழைப்பது என்மேற் சுமந்த கடமையாயிருக்கின்றது. என் சொந்த பலத்தால் நான் ஒன்றுமே செய்யத் திராணியற்றவளாயிருந்தாலும், சர்வேசுரனுடைய அநுக்கிரகத்தாலும், அர்ச். கன்னிமரியாயினுடையவும், நமது பிதாவாகிய அர்ச். பிரான்சீஸ்குவினுடையவும் வேண்டுதல் மன்றாட்டினாலும், எல்லாம் செய்ய வல்லவளாகிறேன். என் மனம் பொருந்திய ஓர் அற்ப அசட்டைதனத்தினால் ஒருபோதுஞ் சபையின் ஏற்பாடுகளை மீறி நடக்கமாட்டேன் என்று பிரதிக்கினை செய்கிறேன். அவசரமில்லாமல், அல்லது பெரியோர் அநுமதியின்றி ஞான முயற்சிகளுக்கு ஆஜராகாமற் போகமாட்டேன். என் பேரில் அதிகாரமுடையவர்களுக்கு எப்போதும் தீவிரமாய்க் கீழ்ப்படிவேன். என் சிரேஷ்டர்கள் எனக்குக் கற்பிப்பதை சர்வேசுரன் தாமே கற்பிக்கிறார் என்று நிச்சயித்துக்கொண்டு குருட்டுக் கீழ்ப்படிதலை அப்பியசித்து வருவேன். தாரித்திரத்தைச் சாக்கிரதையாய் அநுசரிப்பேன். எனக்கு எதுவும் மெத்த நல்லதென்று நினைத்து, எதையும் இழக்காமலும், சேதப்படுத்தாமலும் பத்திரமாய்க் காப்பாற்றுவேன். அர்ச். கன்னிமரியாயின் பேரில் பக்தியும், பஞ்சேந்திரங்களின், முக்கியமாய்க் கண்களின், அடக்க ஒடுக்கமும், உள்ளொறுத்தலும், வெளியொறுத்தலும், கற்பு என்கிற அழகிய புண்ணியத்தைக் காப்பாற்ற உதவும் உத்தமமான சாதனங்கள் என்று எப்போதும் ஞாபகத்தில் வைப்பேன். கீழ்ப்படிதல் எனக்கு உத்தரவு செய்கிற எல்லாவற்றிலும் ஒறுத்தல்கள் செய்யவும், சர்வேசுரன் எனக்கு அனுப்புகிற ஒறுத்தல்களை ஏற்றுக்கொள்ளவும் பிரதிக்கினை செய்கிறேன். அவசரநிமித்தமாவது, பிறர்சிநேக நிமித்தமாவது, உத்தரவுடன் மாத்திரம் சம்பாஷிப்பேன். நீ அர்ச்சியசிஷ்டவளாக விரும்பினால், உன் நாவை அடக்கிக்கொண்டு ஊமையாயிருக்கவேண்டும். எல்லார்மட்டிலும் இராஞ்சிதமாய் நடந்துகொள்வேன். சர்வேசுரனுடைய பிரசன்னத்தை என்னாலியன்றவரையிலும் அடிக்கடி ஞாபகப்படுத்திக்கொள்வேன். என் சகோதரிகளைச் சேசுவின் பரிசுத்த பத்தினிகளாகப் பாவிப்பேன். அவர்களுடைய புண்ணியங்களைக் கண்டுபாவித்து அவர்களுடைய குற்றங்குறைகளை மன்னித்து, அவர்களோடு இருக்க நான் அபாத்திரமுள்ளவளென்று சிந்திப்பேன். என்னால் செய்ய இயலாது என்று நினைக்கத்தக்க ஓர் காரியம், பெரியோர்களால் எனக்குக் கற்பிக்கப்பட்டால், எல்லாம் சர்வேசுரனுடைய உதவியால் நான் செய்ய சக்தியுள்ளவளாகிறேன் என்று நினைப்பேன். சபையின் பழக்க வழக்கங்களையும், பாரம்பரியமாய் நடந்துவரும் முறைமைகளையும் அநுசரிப்பேன். என்னைப்பற்றிப் பெருமையாய் ஒருபோதும் பேசாமலும், என் குற்றங்களைப்பற்றி சாக்குபோக்கு சொல்லாமலுமிருப்பேன். அர்ச். கன்னிமரியாயைக் கண்டு பாவிப்பேன். சர்வேசுரன் மட்டிலும் புறத்தியார் மட்டிலும் அன்புபாராட்டுவேன். எல்லாவற்றையும் சர்வேசுரனுடைய நேசத்துக்காகச் செய்வேன். என் சொந்த இரத்தத்தில் இந்த உடன்படிக்கையை எழுதிவைப்பதே என் அத்தியந்த ஆசை.”—மரி அசுன்தா சகோதரி.

அசுன்தா சகோதரி தன் சொந்த இரத்தத்தால் எழுத விரும்பின மேற்கண்ட ஒழுங்குகள், ஒப்புக்கு மாத்திரம் குறித்துக்கொள்ளப்பட்ட

ஒழுங்குகளாயிராமல், அவளால் பிரமாணிக்கமாயும், உதாரமாயும் தினமானம் அநுசரணைக்குக் கொண்டுவரப்பட்டவைகளா யிருந்தனவென்று சொல்லவேண்டும். (தொடரும்.)

S. M.

GNANAMANI, III PART.
ஞானமணி 3-ம் பாகம்.
55-ம் அதிகாரம்.

அக்கோலையை நடத்த அவ்விருவரும் தேவதைகளுக்குப் பொருத்தனைகளுடன் கங்கணம் கட்டிக்கொண்டார்கள்.

நாடகம் முடிவாகவே, அதில் சேர்ந்த பிள்ளைகள் அனைவோரும் தங்கள் தங்கள் வேஷத்துடன் நாடகமேடையில் வரிசையாய் நின்றார்கள். அவர்களுடைய விநோதமும் விசித்திரமும் அலங்காரமுமான வஸ்திராபரணங்களைப் பார்க்கும்போது அவைகள் பார்வைக்கு மிகவும் அழகாயிருந்தன. அவர்களுக்குமுன் பியானோ, ஆர்கனெட் முதலிய வாத்தியங்கள் முழங்க, வேஷக்காரரில் அனேகர் பிடில், பாஞ்சோ, புலூட், கிளாரிநெட் முதலிய சங்கீதக் கருவிகளைக் கையில் பிடித்துக்கொண்டு தயாராய் நிற்கும்போது, பிரதர் லியோ தமது கையிலிருந்த சிறு கோலால் சயிக்கினை காட்டவே, அத்தனைபேரும் தங்கள் கையிலிருந்த வாத்தியங்களைக் கொட்டிக்கொண்டு, ஒரு நேர்த்தியான பாடலைப் பாடத் தொடங்கினார்கள். கேட்கக்கேட்க அது காதுக்கு வெகு இன்பமாயிருந்தது. அது பாடி முடியவே, (Encore, encore) என்னும் சப்தம் சபையினின்று கேட்கப்பட்டதை பிரதர் லியோ கவனியாமல், இராஜ வாழ்த்தல் பாடலைப் பாடும்படி தமது சிறுகோலை மேலே உயர்த்தவே "காட்சேவ் அவர் குயீன்" என்றுபாடத் துவக்குகிறதைக் கேட்ட சபையோரனைவோரும் எழுந்து நின்றார்கள். அவர்களில் அனேகர் இராஜபாட்டை பஜனைக்காருடன் பாடினார்கள்.

சகலமும்முடிந்தபின் விஜயரங்கமகாராஜாவும், ஜட்ஜ், கலெக்டர் முதலிய பெருமான்களும் பிஷப்புக்கும், ஸ்கூல் மானேஜருக்கும் உபசார வார்த்தைகூறி வெளியே புறப்பட்டார்கள். மற்றவர்கள் அங்கேயே நின்றுகொண்டு அன்று தாங்கள் பார்த்ததும் கேட்டதுமான சங்கதிகளைப்பற்றிப் பேசிக்கொண்டு, இந்த நேர்த்தியான நாடகத்தையும் பாட்டுக்கச்சேரியையும், சிறப்பலங்கார முதலியவற்றை மகாத் திறமை சாமர்த்தியத்துடன் சித்தப்படுத்தின பிரதர் லியோவையும் புகழ்ந்து மெச்சிக்கொண்டு, அந்தச் சிறந்த மண்டபத்தின் அலங்கார ஜோடினைகளைப் பார்த்து மகிழ்ந்துகொண்டிருந்தார்கள்.

அந்நேரத்தில் சுவரில் தொங்கிக்கொண்டிருந்த ஒரு கொடி தொப்பென்று கீழே விழுந்த சத்தத்தைக் கேட்ட பிரதர் லியோ அங்கு என்ன விழுந்ததென்று பார்க்கும்படி துரிதமாய் ஓடிவந்தார். அவருடைய துணைவராகிய பிரதர் சிரிலும் அவரைப் பின்சென்றார். அவர்களிருவரும் அந்தக் கொடியைக் கையிலெடுத்துப் பார்த்துக்கொண்டிருக்கும்போது, அங்கு நின்றுகொண்டிருந்த சபையோரில் அனேகர் அவர்களை நெருங்கி, "என்ன! பிரதர் நாடகம் நடைபெற்ற மூன்றுமணிநேரமும் மூன்று நிமிஷம்போலக் காணப்பட்டது. 12-மணிமட்டும் இருந்தால் எவ்வளவோ ஆனந்தமாயிருக்கும்! இந்த வருஷம் நடந்தேறின நாடகமும், பாட்டுக்கச்சேரியும் எந்த வருஷமும் நடக்கவில்லை. இது எல்லாம் உங்கள் விடாமுயற்சியால் நடந்தது" என்று சொல்வதைக் கேட்ட பிரதர் லியோ "நான்மாத்திரம் அல்ல, பிரதர் சிரிலும் இன்னும் மற்ற பிரதர்மாரும் இதற்காக வெகு பிரயாசையும் முயற்சியும் பட்டார்கள்" என்றார்.

அந்நேரத்தில், அந்தக் கூட்டத்தில் டிஸ்டிரிக்ட் சர்ஜன் அருகாமையி லுட்கார்ந்திருந்த 70-வயதுள்ள விருத்தாப்பியர் ஒருவர் எழுந்து, பொன்பிடி போட்ட ஊன்றுகோலின் உதவியால் மெல்லென நடந்து பிரதர் லியோ பக்கமாய்ச் சென்றார். அவர் விருத்தாப்பியராயினும் அவருடைய நடையைக் கவனிக்குங்கால், அவர் முன்காலத்தில் கவாத்துசெய்யப் பழக்கப்பட்டவராய்க் காணப்பட்டு, மிலிடெரி நடையாய் நடந்துபோனார். இவர் பிரதர் கிட்டேபோய்ச் சேர்ந்ததும் அவருடைய வலது கரத்தைப் பிடித்து "கூட் னைட் சார்" என்று கைகுலுக்கினார்.

பிரதரும் மிகவும் வாஞ்சையுடன் "கூட் னைட்" என்று, பதிலுரைத்து, "உம்மை நான் ஒருபோதும் பார்த்ததில்லையே" என்றார்.

டிஸ்டிரிக்ட் சர்ஜன் உடனே அந்தக் கூட்டத்தில் சென்று, "பிரதர், இவர் இந்த ஊருக்கு அன்னியராயினும் எனக்கு வெகுகாலத்து இஷ்டர். என்னைப் பார்க்கும்படி இவ்விடத்துக்கு வந்தா" ரென்று டாக்டர் முனிசாமி முதலியார் சொன்னார்.

அப்போது அன்னியன் பிரதரை நோக்கி: "சார் எனக்குப் பிராயம் 70-க்கு மேலாகிறது. அனேக இடங்களில் பலவிதமான நாடகம், வாசகப்பா முதலிய ஆட்டங்களைப் பார்த்திருக்கிறேன்; ஆனால் நானின்று பார்த்தது, ஆ! ஆ! எவ்வளவு சுந்தரமானது! நாடகத்தின் கதா விஷயமும், நாடகமேடையின் அலங்கார சோடினைகளும், ஆட்டக்காரரின் உடபாவனையும், பாடல்களின் தொனியும் இன்பமும் மெய்யாகவே புகழத்தக்கவை! இந்தப் புகழ்ச்சி முழுதும் உமக்கே செல்லத்தக்கது" என்றார்.

பிரதர் லியோ.—அப்படிச் சொல்லவேண்டாம், இதில் நான்மாத்திரமல்ல, அனேகர் என்னோடு ஏகோபித்து உழைத்திருக்கிறார்கள்.

அன்னியர்.—நீங்களே இதற்கெல்லாந் தலையாக நின்று நடத்தினதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். நல்லது: தங்களுடைய ஜென்மநாடு இன்னதென்று கேட்க எனக்கு உத்திரவோ சார்?

பிரதர்.—என் ஜென்மநாடு இந்தியாதான்.

அன்னி.—அது வாஸ்தவமே; தாங்கள் எந்த ஊர்?

பிரதர்.—நான் பிறந்த ஊர் ஒரு சிறு கிராமம்: அது இவ்விடத்தினின்று வெகுதூரம்.

அன்னி.—தென்தேசமோ?

பிரதர்.—ஆம் தென்நாடுதான்.

அன்னி.—செங்கற்பட்டு தங்களுக்குத் தெரியுமோ?

பிரதர்.—ஆ, ஆ, தெரியும்; அதுமாத்திரமல்ல, மதராஸ் இராஜதானியின் பிரதான பட்டணங்களில் அநேக நகர்களையும் அறிவேன்.

அன்னி.—உமது நாமம்?

பிரதர்.—பிரதர் லியோ.

அன்னி.—வேறு பெயரில்லையோ?

பிரதர்.—நானிங்கு வருவதற்குமுன் பல பெயரால் அழைக்கப்பட்டேன்.

அன்னி.—பண்டிதர் என்கிற பெயரால் கூட அழைக்கப்பட்டதுண்டோ?

பிரதர்.—(அதிசயத்துடன், சற்று நேரம் மவுனமாயிருந்து) இருக்கலாம்.

அன்னி.—செங்கற்பட்டில் பல வருஷங்களுக்குமுன் நடந்த கொலையைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறீரோ?

பிரதர்.—ஒரு வருஷத்துக்கு எத்தனையோ கொலைகள் நடந்தேறிவருகின்றன!

அன்னி.—ருக்மணியென்னும் ஒரு ஸ்திரீயின் கொலையைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறீரோ?

பிரதர்.—(இந்த வார்த்தை அவர் காதில் விழவே, தாமரைப் புஷ்பம்போல் மலர்ந்திருந்த அவருடைய அழகிய முகம் சுருங்கி, அதில் அச்சக்குறி காணப்பட்டது. வாய் குளறி கேள்விக்குத் தகுந்த மறுமொழி பகராமல்) என்ன? என்ன சொல்லுகிறீர்?

அன்னி.—செங்கற்பட்டில் கொலை செய்யப்பட்ட ருக்மணியைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீரோ?

பிரதர்.—(மறுபடியும் வாய் குளறி, சம்பாஷணையை மாற்றப் பிரயாசைப்பட்டுங் கூடாமல்) உலகில் எத்தனை ருக்மணியோ!

அன்னி.—25 வருஷங்களுக்குமுன் செங்கற்பட்டில் கொலையுண்ட ருக்மணியே.

இப்படி இருவருக்குஞ் சம்பாஷணை நடக்குங்கால், அந்தப் பிரமாண்டமான மண்டபத்தில் கூடியிருந்தவர்கள் அனைவோரும், பிரதர் லியோவையும் அன்னியரையுஞ் சூழ்ந்துகொண்டு, நடக்கும் விநோதமான சம்பாஷணைக்கு மகா ஆவலுடன் காது கொடுத்துக்கொண்டு நின்றார்கள். மேலும் இந்த சம்பாஷணை கொலையைப் பற்றினதாக இருப்பதாக அறிந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் கூட்டத்தை நீக்கிக்கொண்டு, அன்னியன் பக்கமாய் நின்றுகொண்டு நடக்கும் சம்பாஷணையை கவனத்துடன் கேட்டுக்கொண்டிருந்தார். ஸ்வாமிமார்களிலும் மூன்று பேர் அங்கு நின்றுகொண்டிருந்தார்கள்.

பிரதர்.—செங்கற்பட்டில் நடந்த சங்கதியைப்பற்றி இங்கு பேசுவானேன்?

அன்னி.—என் சமுசயத்தைத் தீர்த்துக் கொள்ளும்பொருட்டே.

பிரதர்.—(அதிக பயத்துடன்) யார்மட்டில் சமுசயம்?

அன்னி.—நான் குறித்துப் பேசும் ருக்மணியை அறிவீரோ?

பிரதர்.—அதற்கென்ன அறிந்திருக்கலாம்.

அன்னி.—அன்று இரவு நடந்த சங்கதி உமக்குத் தெரியுமோ?

பிரதர்.—எந்த இரவில்?

அன்னி.—ருக்மணி கொலையுண்ட இரவில்?

பிரதர்.—ருக்மணியைக் கொலைசெய்தவன் நான் அல்ல.

அன்னி.—ருக்மணியின் புருஷன் நீர் தானே?

பிரதர்.—ருக்மணியின் இரத்தத்தில் நான் கை வைத்தேன் இல்லை யென்பது சத்தியம்.

அன்னி.—இருக்கலாம். ஆனால் ருக்மணி உமது மனைவிதானே?

பிரதர்.—அந்தக் கேள்வி என்னத்துக்கு இங்கே?

அன்னி.—என் சமுசய நிவர்த்திக்கு?

பிரதர்.—இருக்கலாம்...ஆனால்...நானே அந்தப் பழியில் கை வைக்கவேயில்லை.

இந்தச் சம்பாஷணையைக் கேட்ட சபையோர், பிரதர் சமுசாரக்காரனென்பதையும், அவருடைய மனைவி கொலைசெய்யப்பட்ட சங்கதியையும் அப்போதுதான் அறிந்து அதிசயித்தார்கள். சில விசை, இந்த அன்னியன் வேஷம் மாற்றிக்கொண்டு இவரைப் பிடிக்கும்படி வந்த போலீஸ் டிடெக்டிவ் என்று எண்ணி, நடக்கும் சங்கதியை மகா ஆவலுடன் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அங்கு நின்றுகொண்டிருந்த சிரேஷ்டர் தவிர, மற்ற ஸ்வாமிமாரும், பிரதர்களும் ஆவலாதிக்குரிய இந்த விருத்தாந்தங்களைக் கேட்டு பிரதர் லியோமட்டில் வெறுப்புற்றார்கள்.

பிரதர் லியோவோவெனில், பயமும் திகிலும் சங்கோஜமுங்கொண்டு, இந்த அன்னியன் தன் வீட்டில் அநேக வருஷங்களுக்குமுன் நடந்த கொலைக்கேசைத் தன்மேல் சுமத்தி, அவமானப்படுத்தும்படி வந்திருக்கும் தன் விரோதிகளில் ஒருவனாயிருக்க வேண்டுமென்று யூகித்துக்கொண்டு, இந்தப் பரிசுத்த இடத்தைவிட்டு விட்டு கச்சேரிக்கும் ஜெயிலுக்கும் திரியும்படி நேரிடப்போகிறதென்று மனக்கிலேசப்பட்டுக் கொண்டிருக்கையில்:

அன்னி.—உமது வாயினின்று புறப்பட்ட வார்த்தையால் எனக்கு ஆறுதலுண்டாகிறது.

பிரதர்.—நான் கொலைஞனோ?

அன்னி.—என்னை நீர் அறிவீரோ?

பிரதர்.—அறியேன்.

அன்னி.—நான் போலீஸ் சூப்பரின்டென்டு. இப்போதாகிலும் என்னைக் கண்டுபிடிக்கிறீரோ?

பிரதர்.—நீர் சொன்னது பெரும் அபாண்டம்!

அன்னி.—எது அபாண்டம்?

பிரதர்.—ருக்மணியின் கொலையைப்பற்றி என்மேல் சமுசயங்கொண்டது.

அன்னி.—செங்கற்பட்டு டிப்டி சூப்பரின்டென்டை அறிவீரோ?

பிரதர்.—அவரை அரிதாய் அறிவேன்.

அன்னி.—நான்தான் அவர். என் பெயர் வைத்தியநாத நாயகர்.

பிரதர்.—அப்படியானால், நீ ரிங்கு வந்த வேலை இன்னதென்று அறிவேன்.

அன்னி.—அறியமாட்டீர்.

பிரதர்.—என்னை அநியாயமாய்ச் சார்ஜ் செய்ய வந்திருக்கிறீர்.

அன்னி.—என் கடமையை நிறைவேற்ற வந்திருக்கிறேன்.

பிரதர்.—ஒருபோதும் நான் அந்தப் பாதகத்துக்கு உட்பட்டேன் இல்லை.

அன்னி.—கர்மஞ் செய்தவனைத் தண்டிப்பான் ஈஸ்வரன்.

பிரதர்.—நான் அந்தக் கர்மத்தைப் புரிந்தேன் என்கிறீரோ?

இப்படி இருவருக்கும் சம்பாஷணை நடக்கும்போது, பிரதர் லியோவுக்கு அதிக பயமும் துக்கமும் உண்டாகி சங்கடப்படுவதைக் கண்ட சபையோர் அவர் மட்டில் சந்தேகப்படத் தொடங்கினார்கள். சிலவிசை அவர் விசாரணை செய்யப்பட்டு சிட்சிக்கப்படுவாரென்று சிலர் கிலேசத்துக்குள்ளானார்கள். சிலர் இவ்வளவு திறமை சாமர்த்தியமுள்ள மனிதனை இழப்பதால் ஸ்கூலுக்குப் பெரும் நஷ்டம் நேரிடுமென்று எண்ணங்கொண்டார்கள்.

அந்தச் சமயத்தில் அன்னியன் பிரதர் லியோவுடைய வலது கையைப் பிடித்துக்கொண்டு, "சார், உம்மை நான் பார்க்கையில், நீர் வீணாய்ப் பயந்து கலங்குகிறதாகத் தெரியவருகிறது! பயப்படாதேயும். ருக்மணியைக் கொலை செய்தது நீர் அல்ல: இது வாஸ்தவம். நானே தேவாதீனமாய் இங்கு வந்திருக்கிறேன் என்பது சத்தியம். கொலைஞன் இன்னானென்றும், மாசற்றவன் இன்னானென்றும் சாக்ஷி பகரும்படியே

பகவான் என்னை யிங்கு கொண்டுவந்திருக்கிறு ரென்று எண்ணுகிறேன்.

இங்கு கூடியிருக்கும் கனவான்களே! நீரும், சார், நான் சொல்லப்போகிறதைக் கவனமாய்க் கேளீர். சார், சுமார் 30-வருஷத்துக்குமுன் நான் உமது ஜன்ம கிராமத்துக்குச் சென்று, என் குமாரனுக்கு நான் பேசிய பெண்ணை நீர் மண முடித்துக்கொள்ள ஏற்பாடு செய்துகொண்ட படியால், அந்தப் பெண்ணைக் கொலைசெய்யத் தீர்மானித்துக்கொண்டு என் ஊருக்குத் திரும்பி னேன். கலியாணமானபிறகு நீர் உமது மனைவியு டன் செங்கற்பட்டுக்குப்போய், கீர்த்தி செல்வாக் குடன் அதில் வாசஞ்செய்யுங்காலத்தில், முனி யம்மாள் என்னும் ஒரு விதவைப்பெண்ணை உமது வீட்டில் வேலைக்காரியாக அமரும்படி அனுப்பி வைத்தது நானே. துஷ்ட ஸ்திரியான ஸரஸ்வதி யென்பவளை உமது வீட்டுக்கு அடிக்கடிபோய் வரும்படி ஏற்பாடு செய்ததும் நானே. என்னத் தைப்பற்றியென்று தெரியுமா? உம்மைப் பழி வாங்கவேணுமென்னுங் கருத்தோடே ஏவப் பட்டதினலேயன்றி மற்றப்படியல்ல. மேலும் அந்த இரு ஸ்திரிகளும் உமது வீட்டில் நடக்கும் சங்கதிகளை யெனக்கு நாடோறும் அறிவித்துக் கொண்டுவந்தார்கள். நானும் என் வைராக்கியப் பகையைத் தீர்க்கும்படிக்கான சமயம்பார்த்துக் கொண்டேவந்தேன் (என்று சொல்லி விம்மி ஞன்.)

ஆனல், ஜலம்பெருகி ஓடுங் கால்வாயில் என் மகன் மணவாளனும், கல்யாணசுந்தரமும் விழுந்து மூழ்கிச் சாகக்கிடக்குந் தருணத்தில் நீர் அவர்களைக் காப்பாற்றிக் கரைசேர்த்ததைப் பற்றி நான் கேள்விபட்டபோது, உமதுமட்டில் எனக்குள்ள குரோதம் சற்று குறைந்தபோதி லும், நாளுக்குநாள் நீர் பெருங் கண்ணியமும், செல்வாக்கும், பிரக்யாதியும் பெற்றுவருவதைப் பார்த்தபோதும், பிரஜைகள் அனைவோரும் உமது புண்யக் குணாதிசயங்களைக் கண்டு உம்மை மெச்சிப் புகழ்ந்து கொண்டாடுவதைப் பார்த்த போதும், உமதுமட்டில் எனக்கு வெறுப்பும் வைராக்கியமும் காய்மகாரமும் ஆயிரமடங்கு அதிகரித்து, உம்மைக்கெடுத்து நிர்மூலமாக்க முழுத் தீர்மானங்கொண்டேன்.

மீனாட்சி உமக்கு எழுதிய கடிதத்தைப்பற்றி யும், அன்று இராத்திரி உமக்கும் உமது மனை விக்கும் உண்டான வாக்குவாதத்தைப்பற்றியும் நான், முனியம்மாள், ஸரஸ்வதியாகிய இந்த இரு ஸ்திரீகளால் அறிந்துகொண்ட க்ஷணமே, உமது மனைவியைக் கொலைசெய்ய முயற்சித்தேன். (ஆ! பாதகமே! என்று கண்ணீர் சொரிந்தான்.)

என் குமாரன் மணவாளனும், கலியாணசுந் தரமும் அந்தப் பயங்கரத்துக்குரிய கொலையை அன்று இராத்திரியே முடிக்க, தேவதைகளுக் குப் பொருத்தனைகளுடன் கங்கணங் கட்டிக் கொண்டார்கள். (கண்ணீர் சொறியுந் தமது நேத்திரங்களையும் நாசியையும் வஸ்திரத்தால் துடைத்துக்கொண்டு) நானே அந்தக்கொலையை உமதுபேரில் போடும்படி, நீர் சுரூபங்கள் செதுக் குங் கத்தியை யாருக்குந் தெரியாமல் இரகசிய மாய்க் கொண்டுவரும்படி முனியம்மாளுக்குச் சொன்னேன்; அப்படியே அவளுங் கொண்டு வந்த உமது கத்தியை என் குமாரனுக்குக் கொடுத்தேன். ஐயையோ! என்ன மித்திரபேதம் இது! நானே விஸ்வாஸ பாதகன்.

இதற்குப்பின் என் குமாரனுங் கலியாண சுந்தரமும் உமது வீட்டுக்குச்சென்று உமது அரிய மனைவியாகிய ருக்மணியைக் கொலைசெய் தார்கள். ஐயையோ! நான் ஒரு வார்த்தை சொல்லியிருக்கிறேன். இந்தப் பாபிஷ்டிவேலை நடந்திராது. நானே (விம்மல் அழுகைப் பிரலா பத்துடன்) நானே, இந்தச் சண்டாள பாதகத் துக்குக் காரணகர்த்தன். ஆகையால், அதற்கு விதிக்கப்படும் மரணத்தண்டனையை அனுபவிக் கப் பாத்திரமானவன் நானே!

பயங்கரத்துக்குரிய கொலையை நடத்தின பின், அந்த இரத்தப்பழியை, சார், உமதுபேரில் சாட்டும்படி பலவிதத்திலும் முயற்சித்தேன். அன்று இரவு நீர் மதுராந்தகத்துக்குப்போன சங் கதியை நான் புக்கிங்கிளார்க் மூலமாய் அறிந்து கொண்டு, ஒரு டிடெக்டிவை அனுப்பிவைத்து, உபாயமாய் உமது குடும்ப வரலாறுகளை அறியப் பிரயாசைப்பட்டும் அதில் அனுகூலப்பட்டேன் இல்லை. மாஜிஸ்டிரேட் அந்தக் கொலைக்கேசை விசாரணை செய்தகாலத்தில், உம்மைக் குற்றவா ளியாக்க நான்பட்ட முயற்சியெல்லாம் சபலமா னது. நீர் லாக்கப்பில் இருந்த காலத்தில் உம்மை சித்திரவதை செய்து, அந்தக்கொலையை நீரே நடத்தினதாக உமது வாக்கால் ஒப்புக்கொள் ளும்படி நான் கபடமாய்ச்செய்த பிரயத்தன உபாயங்கள் எல்லாம் சபலமாகி, உமக்குப்பதி லாக ஒரு பைத்தியக்காரனை லாக்கப்பில் கண்டு வெட்கி, நாணி, அந்நேரத்தில் எனக்கு உண் டான ஆக்ரோஷத்தால் என் உதட்டை இரத்தம்

வரக் கடித்து, பைத்தியக்காரனைப்போல சீறிப் பாய்ந்தேன் ஜவான்கள்மேல். இந்தப் பாபிஷ்டி வேலையை பகவான் எப்படிப் பொறுப்பார்? (என்று தமது கண்களைத் துடைத்துக்கொண்டு)

இந்தச் சண்டாள வேலையில் சேர்ந்தவர்களுக்கு உண்டான பலாபலனை விவரிக்கிறேன் கேளுங்கள்: என் மகனும், கல்யாணசுந்தரமும் கொலையை நடத்தின இரவே இவ்வூரைவிட்டு ஓடிப்போய், மறுநாள் இராத்திரி மெயிலில் ஏறி பம்பாய்க்குப் புறப்பட்டுப்போகையில், மங்கப் பட்டணத்தில் நடந்த ரயில் விபத்தில் அகப்பட்டு நதியில் விழுந்து மடிந்தார்கள்.

முனியம்மாளும், ஸரஸ்வதியும் செஷன் கோர்ட்டில் விசாரணை செய்யப்பட்டு அனேக வருஷகாலம் ஜெயிலில் அடைக்கப்பட்டு, இப்போது சகலராலும் நிந்தித்து தூஷிக்கப்பட்டு வருகிறார்கள்.

இதற்கெல்லாம் முக்கிய காரணக் கர்த்தாவாகிய நானே, மற்றவர்களைவிட கடந்த 25 வருஷக்காலமாய் அதிக கொடுமையுடன் தண்டிக்கப்பட்டு வருகிறேன். அந்நாள் முதல் இது வரையிலும், என் இருதயத்தில் சமாதானம் என்பதே இல்லை. எப்போதும் கலக்கமும் குழப்பமுங் காரிருள்போல் என் இருதயத்தைச் சூழ்ந்துகொண்டது. இராப் பகலாய் ஒருவித பயப் பிராந்தியால் பீடிக்கப்பட்டு வருந்துகின்றேன். நடந்தாலும், உட்கார்ந்தாலும், வேலைக்குப்போனாலும், போசனத்துக்கு உட்கார்ந்தாலும், ஒரே வார்த்தையில், என்ன வேலைசெய்தாலும் ஒருவித திகில்கொண்டு வந்ததினிமித்தம் பிஞ்சின் எடுத்துக்கொண்டு, பற்பல ஊருக்குப் புறப்பட்டுச்சென்று உல்லாச சந்தோஷத்திலும், வேடிக்கை விநோதத்திலும் காலக்ஷேபஞ் செய்தும். அச்சமுந் திகிலுங் குறையாமல் அதிகரித்துக்கொண்டே வருகிறது.

இப்பயங்கரத்துக்குரிய துன்பங்களைப் போக்கிக்கொள்ளும்படி நான் பிடித்த விரதங்களுக்கும், கொடுத்த தர்ம தானங்களுக்கும், சந்தித்த புண்ய க்ஷேத்திரங்களுக்கும், செய்த ஸ்ரீ தீர்த்த ஸ்நானங்களுக்கும், உடைத்த தேங்காய்களுக்கும், கொளுத்திய கர்ப்பூர சாம்பிராணிகளுக்கும், சமர்ப்பித்த சகலவித பலிகளுக்குங் கணக்கு வழக்கு இல்லை. ஆனால் அவைகளால் அற்பப்பயனும் உண்டாகாமல் அதற்குப்பதிலாக பயமும், திகிலும், வெருட்டுந் திகைப்பும், நூறு மடங்கு அதிகரித்துக்கொண்டே வருகின்றன.

ருக்மணியின் நிழல் என் கண்முன் மங்காத் தீபம்போல் நின்றுகொண்டிருக்கிறது! "சண்டாளா! பாதகா! துரோகி! கொலைப்பாதகா! நீ அநியாயமாய்ச் சிந்தின இரத்தக்கறை மறையுமென்று எண்ணுகிறாயோ?" என்னும் சப்தம் அப்போதைக்கப்போது என் காதில் கேட்டவண்ணமாயிருக்கிறது. இதைப்பற்றி என் கண் இரண்டும் நித்திரையைக் காணாமல் நான் வேதனைக்குள்ளாகிறேன். சிற்சில சமயங்களில் சற்று நேரம் நித்திரை மயக்கத்துக்கு உள்ளாகும்போது ருக்மணியின் உருவம் எனக்குக் காணப்பட்டு, "சண்டாளா, என் நெஞ்சைக் கத்தியால் என் குத்தி ஊடுருவினாய்? நான் உனக்கு என்ன தின்மை புரிந்தேன்?" என்னும் பயங்கரத்துக்குரிய வார்த்தையை நான் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்து, முன்னிலும் அதிக பயங்கொண்டு, சிறு குழந்தைபோல் தேம்பித்தேம்பி அழுகிறேன். இப்படி கடந்த 25 வருஷகாலமாய் இந்த பயங்கரத்துக்குரிய வாதை வேதனையை அநுபவித்து வருங்கால், என் பாவாக்கிரமத்தை உமக்கு அறிக்கையிட்டு உமது மன்னிப்பைப் பெற்றால் சில விசை என் வேதனை குறையும் என்கிற கருத்துடன் தென் இந்தியாவிலுள்ள என் சகல ஸ்நேகிதருக்கும், அறிமுகமான பேருக்கும் கடிதம் எழுதி, நீர் இருக்கும் இடத்தை அறியப் பிரயாசைப்பட்டும், இதுவரைக்கும் அது பெரும் பரம இரகசியமாயிருந்தது!

ஆனதைப்பற்றி எனக்கு இராப் பகலாய் உண்டாகும் மனோ வேதனையை மாற்றிக்கொள்ளுங் கருத்துடன் காசிக்குச் சென்று, அந்த ஸ்ரீ தீர்த்தத்தில் மூழ்கி காவடியெடுக்க பிரார்த்தனை செய்துகொண்டு, சமுத்திரக்கரை ஓரமாய் அநேக காலம் பிரயாணஞ்செய்து, சில தினங்களுக்குமுன் இந்தப் பட்டணம் வந்து சேர்ந்தேன். ஆனால் காசி தீர்த்தம், நான் நிஷ்ரேமாய்க் கொலைபுரிந்த இரத்தினால் கறைப்படுத்தப்பட்ட என் ஆத்மாவைக் கழுவிச் சுத்தப்படுத்துமோ? இது பெரும் சந்தேகமே! ஆகையால் என் சண்டாள துரோகத்துக்குத் தகுந்த தண்டனை பெறும்படி, இதோ என்னை நீதிஸ்தலத்து அதிகாரிகளுக்குக் கையளிக்கிறேன், (என்று மகா துக்க வியாகுலத்துடன் சொல்லி விம்மி விம்மி அழத்தொடங்கினான்.)

அந்நேரத்தில் அங்கு நின்றுகொண்டு, அன்னியன் சொல்லும் வாக்குமூலத்தை ஒரு நோட்டுப்புக்கில் குறித்துக்கொண்டிருந்த போலீஸ்

இன்ஸ்பெக்டர் டிஸ்டிரிக்ட் சர்ஜனைக் கையால் சயிக்கினைக்காட்டிக் கூப்பிட்டு, சற்று தூரம் அழைத்துச் சென்று, "இந்த மனிதன் கொலைப் பாதகத்தைக் கட்டிக்கொண்டதாக அவர் வாயால் நாம் எல்லோரும் அறியலானோம், இவரை இப்போது அரெஸ்ட் செய்ய நினைக்கிறேன். ஆனால் இவர் உமது வீட்டுக்கு விருந்தாளியாய் வந்திருப்பதால், நீர் இவருக்கு ஜாமீனாக நின்றால் நாளைக் காலைவரைக்கும் சார்ஜை நிறுத்திவைப்பேன்" என்றார். டாக்டரும் அதற்கு ஒப்புக்கொண்டதன்மேல், இன்ஸ்பெக்டர் அவரை அரெஸ்ட் செய்யாமல் அங்கேயே நின்றுகொண்டிருந்தார்.

DO NOT BLASPHEME.
தெய்வ மிகமேல்.

(Communicated.)

கருணாநிதியாகிய கடவுள் தாம் அன்போருவாக்கிய மனுமக்களின் நன்மையின் பொருட்டுத் தமது திருவருளினாலே அவர்களுக்குப் பற்பல துன்ப துரிதங்களை வரவிடுகிறார். நமது கஸ்தி துன்பமெல்லாம் நாம் செய்த பாவத்துக் காக்கினையாகவே வருகின்றனவென்று சகல அர்ச்சியசிஷ்டவர்களும் ஒரொலியாகக் கூறுகிறார்கள். இதற் கத்தாட்சியாக வேதாகமத்தில் அநேக உதாரணங்களுண்டு. அசாரியாசென்பவர் நெருப்புச் சூளையிற் கிடந்தபோது "கர்த்தாவே, எங்கள் பாவத்துக்காகத்தானே இந்தப் பொல்லாப்பெல்லாம் வரவிட்டீர். ஏனென்றால், நாங்கள் பாவஞ்செய்தோம். உம்மை விட்டுப் பிரிந்து துரோகங் கட்டிக்கொண்டோம். நாங்கள் பாக்கியவான்களாகும்பொருட்டுத் தேவரீர் கற்பித்ததில் ஒன்றையுஞ் செய்யாமற்போனோம். ஆகையால், தேவரீர் எங்களுக்கு வரவிட்ட துன்ப துரிதங்கள் எல்லாவற்றையும் பட்டனுபவிப்பதற்கு நாங்கள் பாத்திரவான்கள்தான்" என்று பேரொலியிட்டுக் கூறினர். இஸ்ராயேல் பிரசைகள் சர்வேசுரனை விட்டுப் பிரிந்துபோன காலமெல்லாம் சத்துருக்களால் நெருக்கிடைப்பட்டதையும், தங்கள் பாவத்துக்காக மனஸ்தாபப்பட்டுத் தேவன் பக்கமாய்த் திரும்பிய காலமெல்லாம் சுகமனுபவித்ததையும் வேதாகமத்திற் பற்பல இடங்களிற் காணலாம்.

முப்பத்தெட்டு வருஷமள்வாகத் திமிர்வாதம் பிடித்திருந்த ஒருவனை சேசுநாதர் சொஸ்தமாக்கியபின், அவனை நோக்கி "இதோ நீ சௌக்கியமானாய். ஆனால் அதிக பொல்லாப்பு வராதபடிக்குப் பாவஞ்செய்யாதே" யென்றார். இரட்சகர் சொன்ன இந்த வார்த்தைகளை வேதசாஸ்திரிகள் வியாக்கியானஞ்செய்து மேற்சொன்ன சத்தியத்தை உறுதிப்படுத்துகிறார்கள்.

புண்ணியவாளர் தாமனுபவிக்கும் துன்பங்களையிட்டுக் கடவுளை நொந்துகொள்ளாமல் பொறுமையோடு அவைகளை ஏற்றுக்கொள்ளக் காண்கிறோம். அப்படி ஏற்றனுபவிப்பதற்கு அவர்கள் பல காரணங்களைச் சொல்லலாம். ஆனால், தாங்களனுபவிக்கும் துன்பங்கள் தங்களுக்கு நேரிடவிருக்கும் பெருந் துன்பங்களின் ஒரு பகுதிதானென்பதே அவர்கள் சொல்லவிருக்கும் காரணங்களில் மிகவும் முக்கியமானது. ஏனெனில், மண்ணின்றிக் குடமில்லை; காரணமின்றிக் காரியமில்லை. பாவமின்றித் துன்பமில்லை என்பன வாஸ்தவமே. மனிதர் தங்கள் சரீரத்தில் சற்று வியாதி கண்டாலும் தங்கள் எண்ணம் நிறைவேறாவிட்டாலும், பிறர் அனுபவிக்கு மின்பத்தில் பொறாமைகொண்டு தங்கள் ஸ்திதியைப்பற்றி, வீணே வியாகுலப்பட்டு கடவுளை நிந்திக்கத் தொடங்குகிறார்கள். இத்தகைய எண்ணங்களோடு வருந்துகிற ஒரு வியாதியஸ்தனைப் பார்ப்போம். அவன்தான் வருத்தப்படுகிறதற்குத் தன் கன்மவினையைத் தவிர வேறொரு காரணமுமில்லையா வென்று அவனையே கேட்போம். அவன் உண்மையாக நல்ல சரீரம் தனக்குக் கொடுத்திருந்தது பாக்கியமென்றறிந்து, அந்தச் சரீரத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்குத் தகுந்த விதமாய்த் தன் நடக்கையிற் கவனஞ்செலுத்தி வந்தானா? அவன் எப்பொழுதும் அன்னபானாதிகள் புசிப்பதில் மிதமாயும், இன்பங்களனுபவிப்பதில் மட்டாயும் இருந்தானாவென்று கேட்போம். அவன் தன்னறிவீனத்தால் முறைகேடாய் நடந்துகொண்டதினிமித்தம் இப்பொழுது கஷ்டப்படுகிறானென்றால், கடவுள் அநீதியாய் வருத்துகிறாரென்று அவரை நொந்துகொள்வதற்கு யாதாயினுங் காரணமிருக்கின்றதா? நாம் வைத்தியசாலைகள்தோறும் சென்று அவ்விடங்களிலுள்ள நோயாளிகளைக்

கவனித்துப் பார்த்தால் அவர்களிற் பெரும்பாலார் சிற்றின்பத்தில் அளவில்லாமல் உழன்றதினாலும், மீதூண் விரும்பினதினாலும், சண்டைச் சச்சரவினாலும் தேடிய தேட்டத்தின் பயனை அனுபவிக்கிறதையே காண்போம்.

மெய்யான தேவதாசர் கஸ்தி வருத்தங்களை நல்ல மனதோடு சகித்துக்கொள்வதுமன்றி, அவை வரவேண்டுமென்று ஆசைப்பட்டு சர்வேசுரனிடத்தில் ஆவலோடு வேண்டிக்கொள்ளுகிறதும் வழக்கம். இதுபற்றியே, "என்னை நொருக்கத் தொடங்கினவர் நொருக்கி முடிக்கவேண்டுமென்றும், அவர் கையை நீட்டி என்னை வெட்டித் துணிக்க வேண்டுமென்றும், நான் கேட்டுக்கொண்ட மன்றாட்டைக் கொடுத்தருள்கிறதார்" என்று யோப்பென்பவர் வசனித்தார். அர்ச். கிரகோரியார் சொல்லுமாப்போல மெய்யான தேவ ஊழியர் இவ்வுலகத்திலே தங்களைச் சர்வேசுரன் தண்டித்துத் தாழ்த்தவேண்டுமென்று மகா உருக்கமான ஆவல்கொண்டிருப்பதினாலே, தங்கள் பாவத்தை நினைத்து அதற்காகத் தங்களைச் சர்வேசுரன் தண்டிக்கவில்லையென்று கண்டு கஸ்திப்படுவார்கள். இதினிமித்தமே "அவர் என்னைப் படுத்துகிற பாடு ஒன்றையும் விடாமல் படுத்தி முடிப்பது எனக்கு ஆறுதல்" என்று யோப்பென்பவர் வசனித்தார். அதாவது, சிலருடைய பாவத்துக்காக மறு உலகத்திலே அவர்களுக்குக் கொரேமான தண்டனை இடும்பொருட்டு இவ்வுலகத்திலே அவர்களைப் பொறுத்துக்கொள்ளுகிறார். ஆனால் நித்திய ஆக்கினையை எனக்கு இடாதபடி இவ்வுலகத்திலே இப்போது எனக்கு ஆக்கினையிடுகிறார். நல்ல பிதாவைப் போலே இப்போது என்னைத் தண்டிக்கிறார். மரணத்தின்பின் கண்டிப்பான நடுவரைப் போலே எனக்கு ஆக்கினை இடமாட்டாரென்று அர்த்தமாகும்.

இதிவ்வாறிருக்க ஒருவன் "நான் கடவுளுக்கு விரோதமாய் மனம், வாக்கு, கிரிகைகளால் யாதொரு குற்றத்தையுஞ் செய்யவில்லையே; அவர் என் என்னை இவ்வளவு அநீதியாய்த் துன்பப்படுத்தலாம்!" என்று கேட்பானுக்கும். தகப்பனுடைய பாவத்துக்காகப் பிள்ளைகளை மூன்றும் நாலாம் தலைமுறை வரைக்குஞ் சர்வேசுரன் தண்டிப்பாரென்று அடிக்கடி வேதாகமத்திற் சொல்லியிருப்பதை அவன் நன்றாய் உணர்ந்து கொள்வானாக. (பாவதோஷமும், பாவத்துக்குச் செல்லும் அநித்திய அபராதக் கடனுமாகிய இவை இரண்டுண்டு. இதில் அநித்திய அபராதக் கடன்மாத்திரம் பிதிர் வழியாரைப்பற்றி நிற்குமன்றிப் பாவதோஷமவர்களைப் பற்றாதென வறிக.)

ஆத்தும பொல்லாப்பைக் கவனியாமல் சரீர பொல்லாப்பினிமித்தம் கஸ்திப்படுவது சுபாவமாய் நமக்குள்ள பைத்தியமாகும். ஏனெனில், வேறெந்தப் பொல்லாப்பையும்விட நமது பாவங்களுக்காக அதிகமாய்க் கஸ்திப்படவேண்டியது அவசியம். நமது பாவத்தின் கனத்தை நாமே அறிந்துகொண்டால் எவ்வளவு கனமான ஆக்கினையும் இலேசாகத் தோன்றுமென்பது நிச்சயம். அப்போதுதான், "பாவஞ்செய்தேன். தோஷத்தைக் கட்டிக்கொண்டேன். எனக்கு வரவேண்டிய ஆக்கினை இன்னும் வரவில்லை" யென்று யோப்பென்பவரைப்போல அங்கலாய்த்துச் சொல்லுவோம்.

ஆகவே, நமக்கு வருந் துன்ப துரிதங்களையெல்லாம், நமது பாவங்களுக்கு ஆக்கினையாகவும், நாம் திருந்தி நடப்பதற்குத் தூண்டுகோலாகவும் பாவித்து அவைகளைப் பொறுமையோடு சகித்து, நம்முடைய பழய பாவப் பழக்கங்களை விட்டு, சர்வேசுரன் நமக்குக் காட்டியுள்ள சன்மார்க்கத்தில் நடக்க நம்மால் ஆனமட்டும் பிரயாசைப்படவேண்டுமேயல்லாது, கடவுளை நிந்திப்பது கிறீஸ்துவர்களுக்கு எவ்வளவும் அழகல்ல. "தெய்வமிகழேல்."

CORRESPONDENCE.
கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

பண்ணூர் கிராமம், அர்ச். ஆரோக்கியமாதா புதுக்கோவில் பிரதிஷ்டை.

சென்னை அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த இந்த பண்ணூர் கிராமம், செங்கல்பட்டு ஜில்லா, திருவள்ளூர் தாலூக்காவில் உள்ளது. இது ஓர் பெரிய கிறீஸ்துவ கிராமம்; ஜனசங்கியை சுமார் 1500. இந்தக் கிறீஸ்துவர்கள் ஏறக்குறைய 145 வருஷங்களுக்குமுன் கடப்பை கிருஷ்ண ஜில்லாக்களில் அஞ்ஞானிகளாயிருந்து சத்தியவேதத்துக்குத் திருப்பப்பட்டவர்கள். கிறீஸ்துவர்களானதின்பின் அஞ்ஞானிகளால் நெருக்கிடைப்

படுத்தப்பட்டபோது, சேசுசபைக் குருக்களுடைய உதவியால் சென்னப்பட்டணத்துக்கடுத்த கிராமங்களுக்குக் கொண்டுவரப்பட்டு, சத்திய வேதத்தில் நிலைநிறுத்தப்பட்டார்கள். இவர்கள் எல்லோரும் கொண்டகோடகம்மவார். பண்ணூர் கிராமம் சேருவதற்குமுன் கீழ்ச்சேரி என்னும் ஊரில் சிலகாலம் குடியிருந்தனர். அங்கே அப்போதிருந்த ப்லேஸ் துரை என்ற ஒரு ஜில்லா கலெக்டரானவர் இவர்களை ஆதரித்துவந்தார். அவ்விடம் ஜனம் பெருகப்பெருக வேளாண்மை செய்ய வசதி போதாமையினால், பண்ணூர் கிராமத்துக்கு சில ஜனங்கள் வந்து சேரலானார்கள். அக்காலத்தில் அது ஓர் பெருங்காடாய் புலி சிறுத்தை முதலிய காட்டுமிருகங்கள் சஞ்சாரஞ் செய்யும் இடமாயிருந்தது. அவர்கள் அந்த காடு வெட்டி குடியிருக்க, அப்போது அங்கிருந்த இந்துக்கள் ஷை கம்மவார் கட்டிய வீடுகளை இடித்தும் கொளுத்தியும் நாசனஞ்செய்து அவர்களை இம்சித்துவந்தார்கள். ஆயினும், நமது பண்ணூர் கிறீஸ்துவர்கள் மனந்தளராது ஊக்கத்துடன் எல்லாவித கஷ்டங்களையும் அனுபவித்து நமது கத்தோலிக்கு சத்தியமார்க்கத்தை விடாமல் நல்ல கிறீஸ்துவர்களாய் நடந்துவந்தார்கள். தங்களுக்கு ஒரு கோவில் இல்லாமையால் ஆரம்பத்தில் கூரையால் ஒரு கோவில் கட்டினார்கள். அதில் இடம் பற்றாததால் சிலகாலத்துக்கெல்லாம் செங்கல்லால் வேறோர் சிறு கோவில்கட்டி, ஓடு மூடி அதில் சர்வேசுரனைத் தொழுதுவந்தார்கள்.

சிலகாலத்துக்குப்பின் அதுவும் பற்றாமையாய்ப் போனபடியால் அதையே நாலாபக்கமும் அதிகப்படுத்தி சிலகாலம்வரை உபயோகித்துவந்தார்கள். அந்தக்கோவிலும் நாளாவட்டத்தில் பழயதாகிவிட்டமையால், அதை இடித்து இப்போது ஒரு பெரிய கோவில் கட்டியிருக்கிறார்கள். அதன் நீளம் சுமார் 120 அடி; அகலம் 40 அடி; சிலுவை வடிவாய்க் கட்டப்பட்டிருக்கிறது. முன்பக்கத்தில் வலது பக்கமும் இடது பக்கமுமாக இரண்டு கோபுரங்கள் (75 அடி உயரம்) எழுப்பப்பட்டிருக்கின்றன. இரண்டு கோபுரங்களிலும் மணிகள்கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கின்றன. இந்தப் புதுக் கோவில் 1899 ஹூ த்தில் ஆரம்பிக்கப்பட்டு, சங். எம். ஜே. மிக்கேல் சுவாமியாரவர்களால் வெகு செலவு செய்து அஸ்திவாரம்போட்டு தரை மட்டத்துக்கு மேல் சுவர் எழுப்பப்பட்டது. இவர் தம் சொந்த பணத்தில் ரூபாய் ஆயிரத்துக்கு அதிகமாகவே இக்கோவிலுக்கு செலவு செய்திருக்கிறார். பின்னிட்டு 1902ஹூ த்தில் சங். பால சுவாமியார் வேலைசெய்து ஜன்னல், வாசக்கால்களை தயார் செய்து சுமார் 5 அடி உயரம் சுவர் எழுப்பினார். 1905ஹூ மறுபடியும் சங். மிக்கேல் சுவாமியார் விசாரணைக்கு நியமிக்கப்பட்டபோது, வெகு பிரயாசைப்பட்டு கோவில் வேலையை ஒருவாறு பூர்த்திசெய்து, முதல் பூசை அக்கோவிலில் 1908 ஹூ ஆகஸ்மீ 15உ செய்தார். பின்னிட்டு அவர் வேறு விசாரணைக்கு மாற்றப்படவே, சங். டி. தோமாசுநாத சுவாமிகள் விசாரணைக்கு வந்தது முதல் இதுவரையில் இருந்துகொண்டு எல்லா சுண்ணாம்பு வேலையும், கோபுர வேலைகளும் பூர்த்திசெய்தார்.

1918ஹூ ஜூன் மாசம் 25உ செவ்வாய்க் கிழமை மாலை 6-மணிக்கு சென்னை அதிமேற்றிராணியாராகிய மகா வந்திக்கத்தக்க ஆலன் ஆண்டவரவர்களும், சுமார் 12 குருமார்களும், 1000 கிறீஸ்துவர்களும் வெளியிடங்களிலிருந்து வரவழைக்கப்பட்டு, பண்ணூர் சேர்ந்தார்கள். அப்போது கிராமத்தார் வெகு ஆரவாரச் சிறப்போடு பாண்டுவாத்தியம், மேள தாளங்களோடு எதிர்கொண்டு அவர்களைத் தங்கள் கோவிலுக்கு அழைத்துவந்தார்கள். மறுநாள் 26உ புதன் கிழமை சரியாய் 7-மணிக்கு கிறீஸ்துவர்கள் புடைசூழ, பாண்டுவாத்தியம் முழங்க, மேளதாளங்கள் ஒலிக்க, அதிர்வெடிகள் அதிர, கோவில் மணிகள் சப்திக்க, பாடகர்கள் பாட்டுகள் பாட, சீஷப்பிள்ளைகள் வரிசைவரிசையாய்ச் செல்ல, குருமார்கள் எல்லாரும் நிரைநிரையாய் ஆண்டவர்முன் நடக்க, மகாகனம் பொருந்திய ஆலன் ஆண்டவரவர்கள் பங்களாவிலிருந்து புறப்பட்டு, நிரம்பவும் விசித்திர அலங்காரமாய் ஜோடிக்கப்பெற்ற கோவில் வாசலில் வந்து சேர்ந்து, தமது திவ்ய ஆடையாபரணங்களைத் தரித்துக் கொண்டு, செங்கோல் ஏந்திக்கொண்டு, முதல் முதல் அபிஷேகச் சடங்கை ஆரம்பித்து, சங்கீதப் பாடல்களை பாடிக்கொண்டு திரளான ஜனத்தோடு, கோவிலைச்சுற்றி மந்திரித்துக்கொண்டு வந்தார். பின்னிட்டு தலைவாசலைத் சேர்ந்து, சில செபங்களை சொல்லி, பாட்டுக்காரர் உட்பட குருமார்களுடன் ஆண்டவர் கோவிலுள் பிரவேசித்தார். ஜனங்கள் எல்லோரும் வெளியில்தான் இருந்தார்கள். உள்ளே ஆண்டவர் சில ஜெபங்களைச் சொல்லி, கோவில் உட்புறம் மந்திரித்து

முடித்தபிறகு 6 சுவாமிமார்கள் துணையாக நிற்க, ஆண்டவரவர்கள் பொன்மயமான பூசை உடுப்பு தரித்துக்கொண்டு Pontifical High Mass பெரியபாடற்பூசை செய்து, பூசை முடிவில் Papal Blessing என்ற பாப்பானவர் ஆசீர்வாதம் கொடுத்தார். அன்று காலைச்சடங்கு ஆராதனை 10-மணிக்கு முடிவுபெற்றது.

மாலை 4-30 மணிக்கு ஆண்டவரவர்களும், குரு சுவாமிமார்களும், மற்ற கிறீஸ்துவர்களும் இதற்கென்று அலங்காரமாய் ஜோடிக்கப்பட்ட ஒரு பந்தலில் கூடும்படி செய்து, குருமார்களுக்கு புஷ்ப ஆரங்களும், ஆண்டவரவர்களுக்கு அழகிய முத்துக்களோடு சேர்த்துக்கட்டிய பூமாலையும் சூட்டப்பட்டன. பிறகு. அர்ச். ஆரோக்கிய மாதாவினமீது, பண்ணூர் கிறீஸ்துவர்கள் வேண்டுகோளின்படி பண்டிதர் சி. ஏ. சில்வேயிரா அவர்களால் இயற்றப்பெற்ற தோத்திரப் பாக்கள், ம-ள-ள-ஸ்ரீ தம்புசாமி நாயுடு அவர்களால் பாடப்பட்டன. பிறகு வந்தனப்பத்திரிகை தெலுங்கிலும் இங்கிலீஷிலும் வாசிக்கப்பட்டு, கோவிலுக்காக உழைத்த குருமார்களாகிய சங். மிக்கேல் நாதருக்கும், பாலசுவாமியாருக்கும், D. தோமாஸ் நாதருக்கும் முறையே தங்கமுலாம் பூசிய பூசைப்பாத்திரங்கள் அதிமேற்றிராணி ஆண்டவர் கையால், கிராமத்தாரின் நன்றியறிதலின் அறிகுறியாக அளிக்கப்பட்டன. கட்டிட விஷயமாய் உழைத்த நாராயணசாமி மேஸ்திரிக்கு 100-ரூ. பெறுமான தங்கக் காப்பு இனாம் அளிக்கப்பட்டது. கடைசியாய் ஆண்டவரவர்கள் எழுந்து சில வார்த்தைகள் சொன்னபிறகு, அர்ச். பாப்பானவருக்கு வாழ்த்துப்பாடல் இரு சிறுவர்களால் பாடப்பெற்றதோடு அச்சடங்கு முடிந்தது. அன்று இரவு 8-மணிக்குக் கோவிலில் சங்கை. பிர்மான் சுவாமியார் அவர்கள் அரியதோர் பிரசங்கம் செய்தனர். பிறகு ஆண்டவரவர்களால் திவ்யநற்கருணை கோவிலைச் சுற்றி சுற்றுப் பிரகாரம் செய்யப்பட்டு, வெளியில் அலங்கரிக்கப்பட்டிருந்த ஒரு விசித்திர பூப்பந்தலில் திவ்ய நற்கருணை ஆசீர்வாதம் கொடுக்கப்பட்டு, கோவிலுக்குள் "Te Deum" என்ற தேவதோத்திரப் பாடல் பாடியபிறகு கடைசி ஆசீர்வாதத்தோடு அன்றையதினம் மாலைப் பிரார்த்தனைச் சடங்குகள் முடிந்தன. மறுநாள் 27௳ வியாழக்கிழமை காலை 7¼ மணிக்கு அதிமேற்றிராணி ஆண்டவர் அவர்களால்பெரிய பாட்டுப்பூசை செய்யப்பட்டு, 64 பிள்ளைகளுக்கு உறுதிப்பூசுதல் அளிக்கப்பட்டது. 10-30 மணிக்கு ஆண்டவர் மத்தியில் இருக்க குருமாருடைய (Photograph) புகைப் படம் எடுக்கப்பட்டது. புதன்கிழமை இரவு நமது ஆரோக்கிய தேவதாயாரின் தேர் சுற்றுப் பிரகாரம் மகா ஆரவாரச்சிறப்பாய் பாணவேடிக்கைகளோடும், மேளதாளங்கள், பாண்டுவாத்தியத்தோடும் மிக்க விமரிசையாய் நடைபெற்றது.

இப்போது நடைபெற்ற இந்த மகோற்சவ கொண்டாட்டத்தைப்போல் இந்தப் பண்ணூரில் இதுவரையிற் கண்டதுமில்லை. இனி மேற் காணப்போகிறதுமில்லையென்றே சொல்லலாம். **கண்டுகேளித்தோன்.**

அர்ச். தேவமாதா வணக்கமாத மகோற்சவம்.

79-வது காலாட் படையைச்சேர்ந்த கத்தோலிக்கு யுத்தவீரர்களாலும், மற்றவர்களாலும் மெசொபட்டோமியாவிலுள்ள தேவாலயத்தில் (Church Hut 40 Bg. H.) ஷை திருநாள் 1918 ஞு மேமீ 31௳ வெள்ளிக்கிழமை மிக்க விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. சங்கைக்குரிய ராஜரிஷி B. Farrell சுவாமியாரவர்களால் 7-மணிக்குத் திவ்யபூசை நடைபெற்றது. அவுல்தார் முனுசாமி, நாயக் முனுசாமி, சிப்பாய் வில்லியம், சிப்பாய் ஆரோக்கியசாமி என்பவர்களால் பலவிதமான வர்ணக்கொடிகளாலும், மெழுகு திரிகளாலும், நறுமணம் வீசும் அழகிய புஷ்பங்களினாலும் சிறப்பாய் ஜோடிக்கப்பட்டிருந்த தேவதாயாரின் பீடத்தினருகே இரவு 8-மணியிலிருந்து 10-மணிவரையிலும் பாடல் ஜெபமும், பிறகு 10-மணியிலிருந்து 2-மணி வரையிலும் பஸ்ரா No. 9, I. G. Hospital இல் ஸ்தாபிக்கப்பெற்ற தொண்டு பூண்டுவரும் அர்ச். அந்தோனியாரின் நல்லொழுக்க பஜனைத் தலைவராகிய வீ. மதுரநாயகம் என்பவரால் பஜனையும் நிகழ்ந்தது. இத்திருநாளுக்கு உதவிசெய்த சகலருக்கும், அவர்களுடைய குடும்பங்களுக்கும், தேவதாய் தம் வல்லமைபொருந்திய மன்றாட்டினால் தேவ ஆசீர் உண்டாகச் செய்வாளாக. இவ் வருஷத்தைப்போல் இனிவரும் வருஷங்களிலும் இத்திருநாள் இன்னும் அதிக சிறப்பாகக் கொண்டாடப்பட சர்வேசுரனைப் பிரார்த்தித்து நிற்கின்றேன்.

இத்திரு மகோற்சவத்திற்கு பொருளுதவி செய்த புண்ணியவான்களுடைய நாமதேயங்களாவன :—

		ரூ.	அ.
3516. Sy. எம். அந்தோனி 79/86th C. I.	..	0	12
2681. ,, எ. வில்லியம் 79th C. I.	...	3	12
2767. ,, எவ். அந்தோனி ,,	...	0	6
2742. ,, சின்னையா ,,	...	0	2
2790. ,, அகஸ்ட்டீன் ,,	...	0	12
2714. ,, ஜோசப் ,,	...	0	6
4129. ,, எம். கபிரியேல் 79/86th C. I.	...	0	12
1726. Hr. முனுசாமி 79th C. I.	...	3	0
3509. Sy. கோவிந்துராஜலு ,,	...	0	8
1694. ,, முனுசாமி ,,	...	1	0
1786. Nk. முனுசாமி ,,	...	2	0
1823. Sy. ஜோசப் ,,	...	0	12
1335. Hr. G. தாமஸ் ,,	...	0	14
Clerk. ஜான் A. D. W. (E.M.) Section.	...	0	8
Mr. பீட்டர் ,,	...	0	8
,, அந்தோனி ,,	...	0	8
,, எ. எஸ். லூக்காஸ் ,,	...	0	8
,, எச். ஜோசெப் ,,	...	0	8
,, C. கிருஷ்ணசாமி ,,	...	0	8
,, C. R. கிருஷ்ணசாமி ,,	...	0	4
,, பீ. சிகாமணி ,,	...	0	8
,, என். பீ. பாபூ நாயடு ,,	...	0	4
,, பீ. அப்பண்ணு ,,	...	0	4
,, கெ. சாமி பிள்ளை ,,	...	0	4
,, E. P. மேசன் ,,	...	0	4
,, ஜேசுதாசன் ,,	...	0	4
Jamedar. கோனேயா 79th C. I.	...	5	0
3156. Hr. மாணிக்கம் ,,	...	1	0
4797. Nk. முனுசாமி ,,	...	0	8

I. THOMAS HR. 79th C. I.,
Mesopotamia.

கோலாலம்பூர்.

ஐயா,

உம்முடைய அரிய "நல்ல ஆயன்" பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட சில விஷயங்களைப் பற்றி எனக்குண்டாயிருக்கும் பின்வரும் சந்தேகங்களை நிவாத்திக்குமாறு வேண்டுகின்றேன்.

I. 1918ஷ எப்பிரல்மீ த்திய "நல்ல ஆயன்" சஞ்சிகையின் 73-ம் பக்கத்தில் கண்ட "தேவ சடங்கையும் தேவ வாக்கியத்தையும் பற்றிய குறிப்புக்கள்" என்ற தலைப்பின்கீழ் கிறீஸ்துநாதர் உயிர்த்தெழுந்ததினாலே அந்த நரக சர்ப்பத்தின் தலையை நசுக்கிப்போட்டார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. (*a*) அப்படி கிறீஸ்துநாதர் பசாசின் தலையை நசுக்கிவிட்டாராளுல் உலகத்தில் பாவமிருக்கமாட்டாதே. (*b*) அப்படி அவர் நசுக்கியிருந்தால் தேவமாதா பசாசின் தலையை நசுக்குவாளென்று புதுவையில் அச்சடித்த பழய ஏற்பாட்டு புத்தகத்தில் ஆதிபாகமம் III. 15-ம் வசனத்தில் ஏன் சொல்லப்பட்டிருக்கிறது? (*c*) "சமாதானத்தின் கடவுள் சாத்தானை உங்கள் காலின்கீழ் தீவிரமாய் நசுக்கிப்போடுவாராக" என்று வருங்காலத்தைப்பற்றி திருச்சிராப்பள்ளி அர்ச். சூசையப்பர் மடத்தில் அச்சடித்த புதிய ஏற்பாட்டு புத்தகத்தில், உரோமர் XVI. 20-வது வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறதே. இவைகளில் எது மெய்?

II. 1918ஷ மேமீ த்திய "நல்ல ஆய" னில் 97-வது பக்கத்தில் நமது ஆண்டவர் உடனே மோட்சத்துக்குப் போகாமல் 40-நாள் பரியந்தம் இவ்வுலகத்திலிருந்து.......40-ம் நாள் மோட்சத்துக்குப் போனார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி அவர் 40-நாள் வரையிலும் மோட்சத்துக்குப் போகாமலிருந்திருந்தால் நல்ல கள்ளனுக்கு "இன்று என்னோடு நீ மோட்சத்திலிருப்பாய்" என்று சொல்லியிருக்கிறாரே. இதன் விவரத்தையுந் தெரிவிக்கவும்.

III. 1917ஷ மேமீ த்திய ஆயனில் 97-வது பக்கத்தில் தேவமாதாவுக்குத் தோத்திரமாக மே மாத வணக்கச் சிறப்பு கொண்டாடுவதின் வழக்கம் ஆதியிலே ரோமாபுரியில் வழங்கி வந்த அஞ்ஞானிகளுடைய சடங்கிலிருந்து உற்பத்தியானதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நமக்குள் வழங்குகிற சடங்குகளெல்லாம் இப்படித்தான் உற்பத்தியானவைகளோ?

அற்புதநாதன்.

ஷை கண்ட சந்தேக வினாக்களுக்கு விடை பின்வருமாறு:—

I. (*a*) ஆதித்தாய் தகப்பனாலே உண்டாகி நம்மோடுகூடப் பிறக்கிற ஜென்மப் பாவத்தினால் நாம் எல்லாரும் தேவ இஷ்டப்பிரசாதத்தை யிழந்து பசாசுக் கடிமைகளாய்ப் போனோமல்லவா? இவ்வடிமைத்தனம் எதிலே அடங்கியிருந்ததென்றால், பசாசின் அரசாட்சியாகிய பாவத்தினின்று நம்மை நாமே மீட்டுக்கொள்ளவும்,

மோட்ச பாக்கியத்துக்குரிய சுபாவத்துக்கு மேலான புண்ணிய பேறுபலன்களை சம்பாதித்துக் கொள்ளவும் நாம் இயலாதவர்களாயிருந்ததிலேயாம். ஆனால். கிறீஸ்துநாதர் பாடுபட்டு தம்முடைய இரத்தத்தையெல்லாஞ் சிந்தி மரணமடைந்து உயிர்த்ததினால் இவ்வடிமைத்தனத்தினின்று நாம் மீட்டி ரட்சிக்கப்பட்டோம். இதனால் பசாசின் அரசாட்சியாகிய பாவ மொழியவும், நாமிழந்துபோன மோட்ச சம்பாவனையை நாம் அடையவும் வேண்டிய வழிவகைகளை நமதாண்டவர் ஏற்படுத்தியுள்ளாராகையால், பசாசின் தலையை அவர் நசுக்கினாரென்று சொல்ல யாதோர் ஆட்சேபனையுமில்லை. ஆனால் உலகத்தில் பாவமிருக்கமாட்டாதே என்பது சுத்த தவறு. அதேதெனனில் (1) நமதாண்டவர் தம்முடைய பாடுகளினாலும். மரணத்தினாலுஞ் சம்பாதித்த பேற்பலன்கள் இவ்வுலகத்தைப்போன்ற எண்ணிறந்த உலகங்களை இரட்சிக்க போதுமானவைகளென்றாலும் அவரவரும் இப்பேறுபலன்களுக்குப் பங்காளிகளாக முயலவேண்டிய தவசியம். பசித்தவன் சமைக்கப்பட்டிருக்கிற சாப்பாட்டை தான் சாப்பிட்டு பசியை யாற்றிக் கொள்ள வேண்டுமேயல்லாமல் அதைப் பார்த்துக்கொண்டிருந்தால் அவனுக்குப் பசியாறுமோ? ஆறாதே. இத்தன்மைபோல, பாவியானவனும் தன்னுடைய பாவங்களைப் போக்கிக்கொள்ள கிறீஸ்துநாதரால் சம்பாதித்து வைக்கப்பட்டுள்ள இரட்சண்ய சாதனங்களை பிரயோகித்துப்பயனடைய வேண்டுமேயல்லாமல், சும்மாவிருப்பானானால் அவைகளினால் அவனுக்கு யாதோர் பிரயோசனமுமுண்டாகாது. ஆனபடியாலல்லவா அர்ச். அகுஸ்தீன் என்பவரும் "உன்னையின்றி உன்னையுண்டாக்கின சர்வேசுரன், உன்னையின்றி உன்னை இரட்சியார்" என்று வசனித்திருக்கிறார்? (2) அல்லாமலும், பசாசினிடமிருந்து அதற்குள்ள சோதனை செய்யும் வல்லமையை நமதாண்டவர் பறித்துக்கொள்ளவில்லை. அப்படி அவர் அதைப் பறித்துக்கொண்டிருந்தாலும் உலகத்தில் பாவமிராமற்போகாது. ஏனெனனில். அவரவரும் பசாசினால் மாத்திரமல்ல. ஆனால் தத்தம் ஆசாபாசத்தினாலும் துர்க்குணங்களினாலும் சோதிக்கப்படுகிறார்கள். "அவனவன் தன் சுய ஆசாபாசத்தினாலே கட்டப்பட்டு இழுக்கப்படுகிறான்" (இயாகப்பர் I. 14)

(b) "அர்ச். கன்னிமரியம்மாள் எப்படி பசாசின் தலையை நசுக்கினவளானாளென்றால், அவள் ஒருபோதும் பசாசின் அடிமைத்தனத்துக்கு உள்ளாகாமலிருந்ததினாலேயாம். அவள் தன்னுடைய தாயின் கருப்பத்தில் ஜென்மித்த அந்தக்ஷணத்திற்றானே சர்வேசுரனுடைய விசேஷ வரத்தால் ஜென்மப்பாவத்துக்குள்ளாகாமல் காப்பாற்றப்பட்டாள். நமக்கெல்லோருக்கும் இவ்வரம் ஞானஸ்நானத்தின்போதுதான் அருளப்படுகிறது. நமதாண்டவர் தம்முடைய சொந்த பலத்தினால் பசாசின் தலையை நசுக்கியிருக்க, அர்ச். கன்னிமரியம்மாளோ தம்முடைய தேவகுமாரனின் பேறுபலன்களினால் அதன் தலையை நசுக்கினவளானாள்.

(c) "சமாதானத்தின் கடவுள்" நமதாண்டவரான சேசுநாதசுவாமியே ஆவர். அர்ச். சின்னப்பர் உரோமையருக்கு எழுதிய அந்த நிருபத்தில், நமதாண்டவர் அவர்களுக்குப் பசாசின் தலையை நசுக்க, அதாவது அவர்கள் அதன் தந்திர சோதனைகளை வென்று ஜெயித்து, பரிசுத்தமாய்ச் சீவிக்க அநுக்கிரகம் பண்ணியருளவேண்டுமென்று மன்றாடுகிறார்.

II. தெய்வ தரிசனம் எவ்விடத்தில் கிடைக்குமோ அவ்விடமே மோட்சமாகும். நல்ல கள்ளனுக்கு நமது கர்த்தர் தம்முடைய தெய்வ தரிசனத்தை அன்றையத்தினமே. பெரிய வெள்ளிக்கிழமையன்றே கொடுக்கச் சித்தங்கொண்டபடியினால் "இன்று என்னோடு மோட்சத்திலிருப்பாய்" என்றார்.

III. உரோமையின்கண் மே மாதத்தில் நிகழ்ந்துவந்த ஒரு அஞ்ஞானி பண்டிகைக்கு கிறீஸ்துவர்கள் போவதைத் தடுக்கும்வண்ணம் மே மாத வணக்கம் ஏற்படுத்தப்பட்டதென்று "நல்ல ஆயன்" சஞ்சிகையில் சொல்லப்பட்டிருக்கிறதேயன்றி, அஃது அஞ்ஞான சடங்கிலிருந்து உற்பத்தியானதாகச் சொல்லப்படவில்லை. அஞ்ஞானிகளுடன் கிறீஸ்துவர்களுடைய கூட்டுறவையும் சம்பந்தத்தையுந் தடுக்க இத்தகைய பக்திக்கிருத்தியங்கள் அநேகம் திருச்சபையில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவென்றறிக.

ப—ரி.

ரம்போடா, இலங்கை.

ஐயாவே,

ஜூன் மாச சஞ்சிகையில் தாங்கள் அடக்கியனுப்பியிருந்த அனுபந்தத்தை வாசித்து உண்மையை அறியலானேன். நிகழும் கொடிய யுத்தத்தால் இவ்வுலகின் கண் பிரபுக்கள் முதல்

ஏழைகள்வரையிலும் அனுபவிக்கின்ற கணக்கற்ற நஷ்டங்களை அறியாதாரிரார். ஆகையால் தங்களின் மனக்கவலையை மாற்ற நமது சந்தார சகோதரர்கள் சகோதரிகள் ஒவ்வொருவரும் முன்வந்து அவரவர்கள் சக்திக்குத் தக்கவாறு உதவிபுரிந்து, நமது நல்ல ஆயனை கைசோரவிடாது ஆதரிப்பார்களென நான் நம்புகிறேன். தங்களின் வேண்டுகோளுக் கிணங்கி உதவிபுரிபவர்களின் நாமதேயங்களை நமது ஆயனின் வாயிலா யறிய விருப்பமுடையவனாயிருக்கிறேன். ஐயாவே, இத்துடன் நான் அனுப்பிய சொற்ப உதவியாகிய ரூபாய் 1—யேற்றுகொள்வீராக.

C. J. XAVIER.

"நல்லாயன்" னின் நஷ்டப்பரிகார நிதி.

		ரூ.	அ.
ஏற்கெனவே வசூலிக்கப்பட்ட தொகை	...	6	2
Mr. J. P. Kannusamy Pillay (*Kurumbagaram*)	...	3	0
,, L. Arokiasamy (*Kilacheri*)	...	2	0
மெசொபொட்டேமியாவிலுள்ள 79-வது காலாட்படை கத்தோலிக்கு யுத்தவீரர்களிடமிருந்து Mr. T. Thomas மூலமாக ...	...	4	0
ஓர் நண்பரின் நன்கொடை	...	5	0
Mr. R. M. Anthony (*Klang, F. M. S.*)	...	3	0
,, R. P. Sabastian Sam	...	1	0
,, C. J. Xavier (*Ramboda*)	...	1	0
மொத்தத் தொகை,	...	25	2

MISCELLANEOUS NEWS & NOTES.
பற்பல சமாச்சாரம்.

சர். சுப்ரமணிய ஐயர்.—இந்தியா செக்கரடெரி, தம்மை அலட்சியமாய் பேசினதினிமித்தம், சுப்ரமணிய ஐயர் என்பவர் உரோஷங்கொண்டு, தமக்கு ஏற்கெனவே கவர்ண்மென்டாரால் அளிக்கப்பட்ட கவரவப்பட்டங்கள் தனக்குத் தேவையில்லையென்று கூறி, அந்தப்பட்டங்களின் குறிப்படையாளமான பதக்கங்களையும் அரசருக்கு அனுப்பிவிட்டார்.

ராஜ கொலைகள்.—ருஷியாவின் தலைநகரமாகிய மாஸ்கோவிலிருந்த ஜெர்மன் சக்கரவர்த்தியின் ஸ்தானாதிபதியும், மாஜி ருஷிய சக்கரவர்த்தியாகிய சார் என்பவரும் ருஷியால் கொலைசெய்யப்பட்டார்கள். இனி ருஷியாவில் பல இடங்களைத் தங்கள் கைவசப்படுத்த ஜெர்மனியருக்கு நல்ல சாக்குப்போக்கிற் கிடமுண்டாயிருக்கிறது. இதனால் ருஷியர்களுக்குள்ளிருக்கும் கலகமும் புரட்சியும் அதிகரிக்குமென்று நம்ப இடமுண்டு.

டென்மார்க் தேசம்.—ஒரு காலத்தில் கத்தோலிக்கு தேசமாயிருந்த டென்மார்க் தேசம், இங்கிலாண்டைப்போல் சர்க்காரின் குரூர சட்டத்தால் புரோடெஸ்டாண்டு மதத்தைக் கைப்பற்ற கட்டாயப்படுத்தப்பட்டது. இப்போது சில வருஷங்களாய் அத்தேசத்தில் அனேகர் கத்தோலிக்கராகிறார்கள். சர்க்காரும் சத்ய வேதத்துக்கு விரோதமாய் ஏற்படுத்திய சில அநியாய சட்டங்களை நீக்கிவிட்டார்கள்.

ரோசா எனும் ஒரு குருவானவர்.—இவர் உரோமையிலுள்ள ஜேசு என்னும் தேவாலயத்துக்கு விசாரணை ஸ்வாமியார். நமது பரிசுத்த தந்தையாகிய 15-ம் ஆசீர்வாதப்பர் பாப்பானவராவதற்குமுன் அனேக வருஷகாலமாக இவரைத் தமது ஆத்துமகுருவானவராகத்தெரிந்துகொண்டிருந்தார். பாப்பானவரானபின்னும் இவரைத் தமக்கு ஆத்தும குருவாயிருக்கும்படி கேட்டுக்கொண்டார். இந்தப் பரிசுத்த குருவானவர் சமீபத்தில் தமது 90-ம் பிராயத்தில் பரலோகபிராப்தியானார்.

பூகம்பம்.—கடந்த மாதத்தில் கல்கத்தாவில் பூகம்பம் ஒன்று, அதாவது பூமி அதிர்ச்சியுண்டானது. அப்போது வீட்டிலுள்ளவர்கள் வெளியே ஓடிப்போனார்கள். இதனால் உயிருக்கு நஷ்டம் உண்டாகாவிட்டாலும், அப்பட்டணத்தார் பயத்தால் ஆட்டப்பட்டார்களென்று கூறப்படுகிறது. இதன் சம்பந்தமாய் மைலை மேற்றிராசனத்தைச் சேர்ந்த ஷிப்பூர், நகரி, ஹவ்ஷனபாட், பார்டெட், டெஸ்காங் என்னும் இடங்களிலுள்ள கோவில்களும் விசாரணைக் குருக்களின் வீடுகளும் பழுதாய்ப் போயினவென்று விசனிக்கிறோம்.

15-ம் ஆசீர்வாதப்பர்.—ஆகிய நமது பாப்பானவர் சதுரங்கம் என்னும் ஆட்

டம் ஆடுவதில் வெகு சமர்த்தராம். இவருக்குள்ள பல கனத்த வேலைகளின் மத்தியில் கிடைக்கும் சிறு ஓழிவு நேரங்களை இதை யாடுவதில் செலவழிப்பதே இவருக்குப் பிரியமாம். இவர் கர்தினலா யிருந்த காலத்தில் இவரோடு இவ்வாட்டத்தை ஆடின ஒரு குருவானவர் மூலமாய் இச்செய்தி இப்போது வெளிக்குவருகிறது. காலப்போக்காய் ஆடும் ஆட்டங்களுள் சதுரங்கமானது மிகு புத்திசாலித்தனமாய் ஆடவேண்டிய ஆட்டமென்று நாம் சொல்லவேண்டுவதில்லை.

புதுக் காசு.—காலணுக் காசில் பாதியாகிய ஒன்றரைக் காசு புதிதாய் அச்சடிக்கப்பட்டு இந்த ஆகஸ்டுமீ முதல் சென்னையில் வழங்கிவரும். இக்காசு சென்னைக்குப் புதிதாயினும் கோயம்பத்தூர் முதலிய தென்னாடுகளுக்குப் புதிதல்ல. அந்த ஜில்லாக்களில் இக்காசு நெடுங்காலமாக வழங்கிவருகிறது. காலணுவுக்கும் ஒரு காசுக்கும் மத்திபமான இக்காசு, விசேஷமாய், ஏழைகளுக்கு சௌகரியமானது என்பதற்கு ஆட்சேபணையில்லை. ஏனெனில், செப்புக காசென்றால் அதைக் கண்ணால் பார்க்கவும், கையால் தொடவும் மனமில்லாத மகாப்பிரபுக்களு மிருக்கிறார்களன்றோ?

கழுதை யிறைச்சி.—நாவுக்கு வெகு ருசியாயிருப்பதாக மொருவியா நாட்டின் தேசாதிபதி தமது பிரஜைகளுக்கு அறிவித்து, பாரிஸ் நகர் முற்றிகையிடப்பட்டகாலத்தில் தானும் மற்றவர்களும் அந்த இறைச்சியை அருந்தினதாகக் கூறுகிறார். கழுதை இறைச்சி, மாட்டு அல்லது ஆட்டு இறைச்சியிலும் அதிக ருசியுள்ளதென்று வேறொரு கனவான் தெரியப்படுத்தி, கழுதை இறைச்சியை யாராகிலும் ஒருவிசை ருசி பார்த்தபின் மற்ற இறைச்சிக்கு ஆசைப்படமாட்டாரென்று சொல்லுகிறார். இவ்வாறு கழுதை இறைச்சியை மனிதர் பட்சிக்க ஆரம்பித்துவிட்டால் வண்ணான் பாடு பெரும்பாடாகுமன்றோ?

ஆகாய விமானத் தேர்ச்சி.—பிரென்ச்சு ஆகாயப்படையைச் சேர்ந்த உபசேனாதிபதி பொருவா, பாரிஸ் நகரத்திலிருந்து மார்சேல்ஸ் நகரத்துக்கு ஆகாயமார்க்கமாய் ஐந்து மணி நேரத்தில் பிரயாணஞ் செய்தாராம். இந்த இரண்டு இடத்துக்கும் மத்தியிலுள்ள தூரம் 536-மைலாகும். மேற்கண்ட ஆகாய விமானி ஒரு மணிக்கு 100 மைலுக்கதிகமாய் பிரயாணஞ் செய்திருக்கிறார். இது வெகு சாமர்த்தியமான பிரயாணம். இவ்வளவு வேகமாய் விமானத்தை செலுத்தினவர்கள் இதுவரையில் யாருமில்லையெனச் சொல்லப்படுகிறது.

ஆகஸ்டுமீ 4-ம் தேதி.—இம்மாதம் நாலாம் தேதி, ஐரோப்பிய மகா யுத்தத்தில் நமது பிரிடிஷ் இராஜாங்கம் சம்பந்தப்பட்டதின் நான்காம் வருஷோற்சவ தினமாகும். அன்றையதினம் நேச கட்சியாருக்கு ஜெயம் வரும்படி பிரிடிஷ் ராஜாங்கத்துக் குட்பட்டவர்களெல்லோரும் சர்வ ஜீவ தயாபரனை நோக்கி மன்றாடுந் தினமாகப் பாவிக்கப்படவேண்டுமென்று நமது சக்ரவர்த்தியார் ஆக்யாபித்திருக்கிறார்கள். இந்த அபீஷ்டத்தின்படி சென்னை அதிமேற்றிராசன ஆலயங்களில் அன்று விசேஷப் பக்தி கிருத்தியங்கள் நடைபெறும்.

“நோபில் பீஸ் பிரைஸ்”.—உலகத்தில் சமாதானத்தைப் பரிபாலிக்கும் பொருட்டு நோபில் என்னும் பரோபகாரியால் ஏற்படுத்தப்பட்ட வெகுமதி, நமது பரிசுத்த பாப்பானவராகிய, பதினைந்தாம் ஆசீர்வாதப்பருக்கு அளிக்கப்படுமென்று ஒரு வதந்தி வத்திக்கான் மாளிகையில் உலாவுவதாகச் சொல்லப்படுகிறது. உலகத்தில் நித்திய சமாதான முண்டாவதற்காக நமது ஆசீர்வாதப்பரைப்போல் அல்லும் பகலும் ஆவல்கொண்டு உழைந்து, பற்பல அரசர்களுக்கு அடுத்தடுத்துத் திருமுகமனுப்பி, அநேக நன்மைகள் செய்தவர்கள் யாருமில்லையென்பதற்கும், அவர் ஷை வெகுமதிக்கு முற்றும் அருகர் என்பதற்கும் ஆடசேபனை சொல்லத் துணிவார் யார்?

குயினீன்.—தீராத ஜுரத்தையும் தீர்க்க வல்லதென்று, தெரிந்தோர் பலராலும் தீர்மானிக்கப்பட்ட “கொயினா” என்று சாதாரணமாய் வழங்கப்படும் குயினின் மருந்தானது இதுவரையில் டச்சுக்காரருக்குச் சொந்தமாகிய ஜாவா வென்னுந் தீவிலிருந்து இந்தியாவுக்கு வந்து கொண்டிருந்தது. இப்போது அது, ஜாவா

கவர்ன்மென்டாரால் ஏற்றுமதி செய்யப்படாது என்று உத்தரவாயிருக்கிறதாகத் தெரியவருகிறது. இந்தியாவிலுள்ள எண்ணிலடங்காத அஸ்பத்திரிகளிலும், தபாலாபீசுகளிலும் விஸ்தாரமாய் வழங்கப்படும் இம்மருந்தின் வருத்து நின்றுபோமானால் ஏழை வியாதியஸ்தர்களின் கதியென்னவாகுமோ? இந்த மருந்தானது இந்நாட்டில் நீலகிரிபோன்றமலைப்பிராந்தியங்களில் வெகு சொற்பமாய் பயிரிடப்படும் ஒருவித மரங்களிலிருந்து தயார்செய்யப்படுவது. இப்போது இதை விஸ்தாரமாய் இந்நாடுகளில் பயிரிடும்படி ஏற்பாடுசெய்தால்தான் தாவிளை.

“இன்புலுவன்சா” என்னும் தோற்றுக்காய்ச்சல்.—பொம்பாய், கல்கத்தா, கராய்ச்சி, பூனா முதலிய விடங்களிலிருந்து, இப்போது சென்னைக்குள், சென்னைக்கடுத்த ஊர்களுக்கும் பரவிவந்திருக்கும் இந்தத் தொற்று ஜுரத்தால் ஜனங்கள் படுந் தொந்தரவு கொஞ்சமல்ல. வீட்டுக்கு வீடு மூன்றுபேர் நாலுபேர் பாயும் படுக்கையுமா யிருக்கிறார்கள் ஆபீசுகளிலும், மற்ற தொழிற்சாலைகளிலும் பெருந்தொகையினர் வராதிருப்பதால், வேலை தடைப்படுகிறது. உடம்பு, கைகால் உளைச்சலோடுவருகிறது இந்த ஜுரம். இது போனபிறகு இதன் பயனாய் உண்டாகும் இருமல், வாய்க்கசப்பு, தலை கிறுகிறுப்பு, சாப்பாடு ஏற்றுக்கொள்ளாமை, வாய்ப்புண் முதலிய கஷ்டங்கள் பல. இது ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்த கப்பல் பிராணிகள் மூலமாய் இந்தியாவுக்குத் தொடர்ந்ததாம். இதை ஸ்பெயின் காய்ச்சல் என்றும், பிளான்டர்ஸ் காய்ச்சல் என்றும் சொல்லுகிறார்கள்.

புதுசவரன்.—இந்தியாவில் செலாவணியாகும் பொருட்டே பதினைந்து ரூபாய் பெறும்படியான பொன் சவரன் புதிதாய் அச்சிடுவதற்கு வேண்டிய டையென்னும் அச்சு முதலிய யத்தனங்களெல்லாம் இங்கிலாந்திலிருந்து வந்துவிட்டன. இந்த ஆகஸ்டுமீ முதலிலே அப்பொன் நாணயங்கள் அச்சிடப்பட்டு தங்கசாலையிலிருந்து வெளிவருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்போது நமது நாட்டில், 19½-ரூபாயிலிருந்து 20-ரூபாய் வரையில் கொடுத்து வாங்கப்பட்டுவரும் சவரன்கள் இங்கிலாந்தில் வழங்குவதற்காக அச்சிடப்பட்டவைகள். ஆனால், இப்போது இந்தியாவுக்கென்று அச்சிடப்படும் சவரன் இங்கிலாந்து சவரனைவிட மாற்று குறைவாயிருக்குமென்று கருதப்படுகிறது. இதற்குக் காரணம், பண்டமாற்றாக வழங்கப்படுவதற்காகக் கருதப்பட்ட பொன் நாணயங்களை இந்நாட்டில் அவ்விதஞ் செய்யாமல், அவைகளை வாங்கி யுருக்கி, நகைநட்டுகள் செய்து பாழாக்கிவிடும் வழக்கத்தை யொழிப்பதற்கேயென யூகிக்கலாம். வெள்ளி நகை செய்பவர்கள், ரூபாயை உருக்காமல், சொக்கவெள்ளியை வாங்கி செய்வதுபோல், பொன் ஆபரணங்கள் செய்பவர்கள் சவரனை வாங்கி யுருக்கிப் பாழாக்காமல், எந்த மாற்றுப் பொன் வேண்டுமோ அந்த மாற்றுப் பொன்னை வாங்கிச் செய்துகொள்வதே கிரமம்.

இந்திய இராஜ்ஜியமுறைத் திருத்தங்கள்.—இந்தியா மந்தரியாராகிய மிஸ்டர் மாண்டேகும். இராஜப் பிரதிநிதியாகிய செப்ஸ்போர்டு பிரபுவும் கலந்து செய்த இந்திய இராஜரீக திருத்தங்கள் கடைசியாய் பிரசித்தப்படுத்தப்பட்டுவிட்டன. பிராமணர் கட்சியாகிய சுய ஆட்சிக் கட்சியைச் சேர்ந்தோரனைவரும், இத்திருத்தங்கள் எவ்வளவும் திருப்திகரமானவையல்லவென்று அவைகளை முழுதுங் கண்டனஞ் செய்கிறார்கள். பிராமணர் அல்லாதார் கட்சியைச் சேர்ந்துள்ளோரிற் சிலர் எதிர்ப்பார்த்திருந்தபடி அவை பிராமணரல்லாதாருக்குப் பெரிதுஞ் சாதகத்தைச் செய்யக் கூடியனவல்லவென்றும், தாங்கள் கோரியபடி வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கொடுக்கவில்லையென்றுங் குறைகூறுகிறார்கள். ஆனால் பொதுவாய் விஷயாவிஷயங்களை சற்று சாவதானமாய்க் கூர்ந்து யோசிக்குந் திறமைவாய்ந்த ஸ்ரீமான் பாபு சுரேந்திரநாத் பானர்ஜி, ஸ்ரீமான் காந்தி முதலிய இராஜதந்திரிகள், தற்கால நிலைமையில் இந்தியாவுக்கு அவைகளைவிட அதிக பொருத்தமுடைய திருத்தங்கள் செய்யமுடியாதென்றும், இந்தியரை எதிர்காலத்தில் சுய ஆட்சிக்கு யோக்கியராக்குவதற்குத் தக்க வழிவகைகளடங்கிய சீர்திருத்தங்களென்றும் சொல்லி, அவைகளை

யும், அவைகளைக் கூர்ந்து யோசித்துச் செய்த மகான்களையும் பெரிதும் புகழுகிறார்கள். இதுவே நமது அபிப்பிராயமுமாகும். இத்திருத்தங்களை அமுலுக்குக் கொண்டுவருவதற்கான மசோதா சட்டம் இப்போது இங்கிலாந்தில் தயார் செய்யப்பட்டுவருகிறது. இது முடிவாவதற்கு மூன்று மாதங்களுக்கு மேற்செல்லுமாம்

அர்ச். அந்தோனியார் சரீரம்.—கோடியற்புதரும், பதுவைப்பதிபருமான அர்ச். அந்தோனியார் சரீரம், பதுவாபுரியில் அது அடக்கப்பட்டிருந்த கோவிலிலிருந்து, எவரும் அறியாவண்ணம் இரகசியமாய், பாப்பானவரின் வத்திக்கான் மாளிகைக்குக் கொண்டுபோகப்பட்டு, அங்கு பதனம்பண்ணப்பட்டிருக்கிறதென்று சமாசாரம் எட்டியிருக்கிறது. இப்போது ஆஸ்திரியருக்கும் இத்தாலியருக்கும் நடக்கிற யுத்த சம்பந்தமாய், ஆகாய விமானங்களினின்று விழும் எறிகுண்டுகளினால், இந்த ஆச்சியசிஷ்டவருடைய சரீரத்துக்கு நாசம் நேரிடாதபடி, அது அப்புறப்படுத்தப்பட்டதாம். அந்த அர்ச். அந்தோனியார் கோவிலிலிருந்த அரியனவும், விலை பெற்றனவுமாகிய அநேக சொத்துக்களும் அவ்வண்ணமே அப்புறப்படுத்தப்பட்டனவாம். சமீபத்திலே இந்தக் கோவில வாசலண்டையில் ஒரு எறிகுண்டு விழுந்து, அதன் கதவை வெகுவாய்ச் சேதமாக்கியதால மற்றவைகளுமச்சேதமாகாதபடி இவ்வித முன் ஜாக்கிரதையெடுத்துக்கொள்ளப்பட்டது. இவ்வாறு அந்தோனியாரின் கோவிலென்றும பாராமல் எறிகுண்டு போட்ட அக்கிரமத்தைப்பற்றி, பாப்பானவர் ஓர் மறுப்புக் கடிதம் ஜெர்மன் கேய்சர் சக்ரவர்த்திக்கு எழுதியிருக்கிறதாகச் சொல்லப்படுகிறது.

அர்ச். கபிரியேல் கல்விச்சாலை, சென்னை.—இக்கல்விச்சாலை சென்ற ஜூன் மீ 17-ம தேதி முதற்கொண்டு, திருச்சிராப்பள்ளியில அர்ச். சூசையப்பர் காலேஜை நடத்திவரும் சேசு சபைக் குருக்கள அதிகாரத்துக்கு மேலோர் உத்தாரப்படி, ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. இக்கல்விச்சாலையை சென்ற எழு வருஷமளவாய் மிக்க திறமையுடனும் வெற்றியுடனும் நடத்திவந்தவராகிய சங். ஜே. ஜெ. ஹோபேர் சுவாமிகளுக்கு, அந்த சுவாமிகளின் பேர்கொண்ட அர்ச்சியசிஷ்டவராகிய அர்ச். யாகப்பர் திருநாளன்று, அதாவது, சென்ற ஜூலை மீ 25-ம் தேதி, ஷை பாடசாலையின் உபாத்தியாயர்களும், மாணாக்கர்களும் ஏகோபித்து, நன்றியறிந்த வந்தனோபசாரப் பத்திரமொன்று வாசித்து அவருக்கும் அவர்களுக்கும் ஏற்பட்ட பந்தன பட்சத்தின் அறிகுறியாக 2 அங்குல நீளமுள்ள ஒரு தங்கச் சிலுவையை வெகுமதியளித்து அவரை உபசரித்தார்கள். ஷை வந்தனோபசாரப் பத்திரத்தை வாசிக்குமளவில், ஷை சுவாமியவர்கள் தமது அதிகாரத்தில் வைக்கப்பட்டுள்ள உபாத்தியாயர்களுடையவும் மாணாக்கர்களுடையவும் நன்மையைக் கனவிலும் கருதியவராய் காரியா காரியங்களை அவர்களுக்கு அநுகூலமாகவே நடத்திவந்திருக்கிறாரென்றும், இவர்மேல் அவர்களுக்கு உண்மையில் பெரிதும் பற்றுதல் ஏற்பட்டிருக்கிறதென்றும் விசிதமாகிறது. ஷை கலவிசசாலை இப்போது சேசுசபைக் குருக்களுக்குக் கையளிக்கப்பட்டிருப்பதால், இனி கத்தோலிக்கு இந்தியரின உயர்தரக் கல்வியாபிவிருத்திக்கேற்ற சாதனங்களைத்தும் செய்யப்படுவதுடன் கூடிய சீக்கிரத்தில சென்னையில் ஒரு கத்தோலிக்குக் காலேஜ் கிளம்பி, மற்ற காலேஜிகளையெல்லாம தோல்வியடையச்செய்து வெற்றியுடன் வேலை செய்யுமென்று கததோலிக்கானவரும் உள்ளத்தில் உவகைகொண்டு வருகிறாகள்.

விபத்துக்கள்.—கல்கத்தாவில் சென்ற வருஷம, 1,000 பேர்வரையிலும் ரஸ்தாக்களில விபத்துகளுக் குள்ளானதாகவும், அவர்களுக்குள் 54-பேர் மரணமானதாகவும், இந்த விபத்துகள் வண்டியோட்டுகிறவர்களின் அஜாக்ரதையா லுண்டானவையென்றும் போலீஸ் கமிஷனர் விளம்பரஞ் செய்கிறார்.

இத்தாலியா சண்டை.—ஆஷ்ட்ரியர் இத்தாலியாவில பிரவேசித்து அநேக பட்டணங்களையும் நாடுகளையும பிடித்துக் கொண்டார்கள். ஆனால் இத்தாலியர் பிரான்சு, இங்கிலீஷ், அமெரிக்கா முதலியவர்களின் உதவிபால ஆஷ்ட்ரியரைத் துரத்திவிட்டு அநேக நகரங்களையும் ஊர்களை

யும் திரும்பவும் தங்கள் கைவசப்படுத்திக் கொண்டுவருகிருர்கள்.

ஆரம்பாக்கம்.—சென்னை அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த ஷை யூரில் நிகழும் ஆகஸ்டுமீ 10உ சனிக்கிழமை மாலையில் மோக்ஷமுடி விராக்கினியின் வருஷாந்திர திருவிழா, கொடியேற்றம், நவநாட் செபம் முதலியவைகளுடன் துவக்கி, ஷை மீ 17உ சனிக்கிழமை மாலையில் வெஸ்பர்ஸ், தேர் சுற்றுப்பிரகாரத்துடனும், மறுநாளாகிய ஞாயிற்றுக்கிழமை 18உ காலையில் பெரிய பாடற்பூசை, பிரசங்கம், திவ்யநற்கருணை ஆசீர்வாதம் இவைகளுடனும் முடிவுபெறும். கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களும் மற்றவர்களும் இந்தப் பொருத்தனைக் கோவிலில் நமது பரம தேவதாயாரை கொண்டாட இத்திருநாளுக்கு வரக்கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள். மோக்ஷ இராக்கினி முடிபெற்ற பரம ஆண்டவள், திருயாத்திரைக்காரருக்கும், திருநாள் நடத்த உதவிசெய்யும் தர்மிஷ்டருக்கும் ஏராளமான சம்பாவனை அளிப்பாள். ஆரய்பாக்கம் நார்த்-ஈஸ்ட் ரெயில்வே லைனில் இருக்கும் ஓர் ரெயில் ஸ்டேஷன். இதற்கும் சென்னைக்கும் 38 மைல். ரெயில் சார்ஜ். 0-8-0. கோவிலுக்கும் ரெயில்வே ஸ்டேஷனுக்கும் மெத்த சமீபம். கோவில் தோட்டத்தில் ஓர் சத்திரம் உண்டு.—S. M. F. IGNATIUS, விசாரணை குருவானவர்.

விளம்பரம்.—இதனுல் சகலமான கிறீஸ்துவர்களுக்கும் ஆசீர்வாதம் தந்து அறிவித்துக்கொள்ளுகிறதாவது:- திருமந்திரிமா நகரெனுந் தசுநேவிஸ்மாதா பட்டணத்தில் பரதர்மாதாவெனும் பரிசுத்த பனிமய நாயகியின் மகோற்சவ நவநாள் நாளதுமீ 26உ துவக்கி ஆகஸ்டுமீ 5உ திருவிழா நிறைவென்பது யாவருமறிந்த விஷயமே. ஆனுல், இவ்வருடம் இவ்விடத்தில் யாதொரு வியாதிவருத்தங்கள் இல்லாதிருப்பதாலும், தணணீர் எதேஷ்டமாயிருப்பதாலும்கிறீஸ்துவர்கள் சகலரும் வந்து திருநாளை உபசரித்து பரிசுத்த பாப்பாண்டவரால் நியமித்திருக்கிற பரிபூரண பலனை அடைந்துபோவது வெகு நனமையைப் பிறப்பிக்குமென்பதை ஞாபகப்படுத்துகிரேம்.—A. Moniz, பங்கு சுவாமியார்.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக்கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 2-ருபாயும், முழக்கலத்துக்கு 4-ருபாயுமாக முன்பணம் அனுப்பினுலன்றி, குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா. ப—ர்.

நன்மரண அறிக்கை.

தூத்துக்குடி.

தூத்துக்குடி பரதகுலச்சீமானுகிய லியோ பர்நாந்திஸ் என்பார் தேகவியோகமாயின துக்கசெய்தியை அவரை யறிந்த அனைவோருக்கும் அறிவிக்க விரும்புகிறேன். தேவசித்தத்தால், இவருக்குற்ற வியாதியைப் பரிகரிக்க பல பிரயத்தனங்கள் பட்டும் பிரயோசனமில்லாமற்போய் விட்டது. இராப்பகல் கண்விழித்துப் பார்த்ததும் அல்லாமல் ஊர்விட்டு ஊர்போய் பெரிய பெரிய டாக்டர்களிடம் காட்டியும் குணப்படாமல் பழயபடி இவ்வூர்க்குவந்து சேசுசபை தனம் சுவாமி அவர்களால அவஸ்தையும் திவ்யநற்கருணையும் தரப்பெற்று மூன்றுநாள்வரை அருமை மனைவி, மக்கள், மைத்துனர், மாமன், தமயன் இவர்களோடு நல்லவிதமாகப் பேசிக்கொண்டிருந்து, கடைசியாக தமது ஆத்துமத்தை தேவனின கரத்தில் அமைதியாய் ஒப்புக்கொடுத்தார். அன்று சாயரட்சை அவரது சடலத்தை மூன்று சுவாமிமார்களோடு கோவிலுக்குக் கொண்டுவந்து, நமது வேதக்கடனைச் செலுத்தினபின் கல்லறைக்குக் கொண்டுபோய் அடக்கம் செய்தார்கள். அன்றிரவு ஊர்வழக்கப்படி பந்துக்கள் சினேகிதர்கள் வந்து தாலிக் கொரச்சல நடந்தது. இந்த நல்ல பிரபு அவர்களின் ஆத்துமத்தின்மேல் சர்வேசுரன் இரக்கம்வைத்து அதற்கு நித்திய இளைப்பாற்றியைக் கட்டளையிட்டு, முடிவில்லாத பிரகாசம் பிரகாசிக்கும்படிச் செய்வாராக. இவருடைய அருமை மனைவி, மகள், மகன் ஆகிய மூவருக்கும் இந்தப் பெருந் துக்கத்தைச் சகிக்க தைரியத்தையும், நீடிய ஆயுளையும் சுகத்தையும் கொடுக்க எல்லாம் வல்ல யிறைவன் கிருபை புரிவாராக. இதைக் கண்ணுறும் கத்தோலிக்கு நண்பர்கள் ஷை லியோ பர்நாந்திஸ் அவர்களின் ஆத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர., பிரி., திரி. வேண்டிக்கொள்ள அவர்களை விநயமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,

12—7—18. யம். ராயில்ஸ்தன்.

புத்தக விளம்பரம்.

கபாலமலை.

"கபாலமலை" என்னும் நாமம்பூண்ட இப்புது ஜெபப் புத்தகத்தின் 2-ம் பதிப்பு தற்போது "நல்லாயன்" அச்சாபீசில் விற்பனைக்குத் தயாராயிருக்கிறது. இப்புத்தகத்தின் சிறந்த பெயருக்குத் தக்கபடி, நமது இரட்சகரின் துயரத்துக்குரிய பாடுகளின்பேரில் நமக்குத் துக்க மனஸ்தாபத்தையும் பக்தியையும் உண்டாக்கும்படியான தியானங்களும் ஜெபங்களும் இதில் அடங்கியுள்ளன. ஆதலின் வேறெந்த ஜெபப்புத்தகத்திலுமில்லாத அநேக நூதன ஜெபங்களை யிதிற் காணலாம்.

வழக்கமான காலை மாலைச் ஜெபங்களும், மாதாப் பிரார்த்தனை, திருநாமத்தின் பிரார்த்தனை முதலியவைகளும் இதிலுண்டு.

வாரத்தின் 7-நாட்களில் ஒவ்வொருநாளிலுந் திருப்பாடுகளின் பேரில் தியானங்களும், திருப்பாடுகளைத் தியானித்துக்கொண்டு பூசைகாணும் வகையும், 7 விதமான மனஸ்தாபப் பிரகரணங்களும், வாரத்தில் வரும் 7-நாட்களில் ஒவ்வொரு நாளிலும் திவ்யநன்மை வாங்குமுன் சொல்லத்தக்க ஆயத்த ஜெபங்களும், தேவநற்கருணை வாங்கினபின் செய்யவேண்டிய நன்றியறிந்த தோத்திரங்களும், வாரத்தின் ஒவ்வொரு நாளிலும் தேவநற்கருணை சந்திக்க 7 வகையான சந்திப்பு ஜெபங்களும் இதிலடங்கியிருக்கின்றன. மகா துயரத்தை யுண்டுபண்ணத் தக்கதும் நூதனமானதுமான சிலுவைப்பாதை யிதிலடங்கியிருக்கிறது மல்லாமல், நமது இரட்சகருடைய பாடுகளின் எத்தனங்களான சிலுவை, ஈட்டி, ஆணி, ஏணி, முண்முடி முதலானவைகளைப் பற்றியும் திரு இரத்தம் இவரைப் பொதிந்த பரிவட்ட முதலான பரிசுத்தப் பண்டங்களைப் பற்றியும் சுருக்கமான சரித்திரமும் ஜெபங்களும் இதிலடங்கியுள்ளன.

அல்லாமலும் தபசுகாலத்தின் ஒவ்வொரு வாரத்திலுஞ் சொல்லத்தக்க ஜெபங்களும், பிரார்த்தனைகளும், வியாகுலமாதாவைக் குறித்து ஜெபங்கள், புதிய சங்கீதம், பிரார்த்தனைகளாகிய இவைகளும் இதிலுண்டு.

முக்கியமான அர்ச்சியசிஷ்டவர்களைக் குறித்து ஜெபங்களும், பிரார்த்தனைகளும், அந்தந்தக் காலத்துக்கு அவசியமான வெவ்வேறு ஜெபங்களும், வியாதியஸ்தரும் மற்றவரும் சொல்லத்தக்க பலனுள்ள மனவல்லயச் செபங்களும் பாலர், பெரியவர்களின் அடக்கத்துக்கு வேண்டிய வெவ்வேறு ஜெபங்களும் தேவார முதலியனவும் இதிலுண்டு.

"கபாலமலை" என்ற இந்த ஜெபப் புத்தகம் கையிலிருந்தால் வேறெந்த ஜெபப் புத்தகமும் அவசியமிரா தென்னலாம். ஏனெனில் மற்ற புத்தகங்களிலுள்ள பிரதானமான ஜெபங்கள் இதிலிருப்பது மன்றி ஏராளமான நூதன ஜெபங்களு மிதிற் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

புத்தகத்தின் சைஸ், 16 மோ. டப்பிள் பூல்ஸ்காப் 549 பக்கங்கள்.

கலிக்கோ கட்டிடம், விலை ரூ 1—0—0 தோல் கட்டிடம், விலை ரூ 1—4—0.

வேண்டியவர்கள் "நல்லாயன்" ஆபீஸ் மானேஜருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

Grand Variety Raffle in aid of St. Ann's Orphanage & Relief of the Poor.

விளம்பரம்.

ராப்பல் புஸ்தகம். சகோதரர்களே! ஒரு 4-அணா கொடுத்து உங்கள் அதிர்ஷ்டத்தைப் பாருங்கள், இதுவே தக்க சமயம். தவறின் மறு சமயம் வாய்ப்ப தரிது.

முந்துங்கள் உடனே. புஸ்தகங்களுக்கு தாமதமின்றி எழுதுங்கள்.

200-பிரைஸ்கள்.

முதல் பிரைஸ் (*First Prize*) *Rs. 1000—0—0.* 2-வது பிரைஸ் (*Second Prize*) *Rs. 500—0—0* ரூபாயிலிருந்து *Rs. 5—0—0* வரையிலும். 22 டிக்கட்டுகளடங்கிய புஸ்தகம் *Rs. 5—0—0.* 1 புஸ்தகம் விற்பனை செய்கிறவர்களுக்கு 2 டிக்கட்டுகள் இனாம். 2 புஸ்தகம் விற்பனை செய்கிறவர்கக்கு 4 பிரி (*free*) டிக்கட்டுகளும், ஒரு ஸ்பெஷல் டிக்கட்டும் இனாமாகக் கிடைக்கும். வேண்டியவர்கள் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

Address:—**J. A. SAWMY,**
Old Poor House Rd., Bangalore.

விலாசம்:—ஜே. ஏ. சாமி,
ஓல்ட் பூர் அவுஸ் ரோட். பெங்களூர்.

லீலியும் ரோசாவும்.

ஆதி திருச்சபையில் அஞ்ஞான மார்க்கத்திலிருந்து மனம் திரும்பின இரு செல்வமாதுசிரோன்மணிகளைப்பற்றிய இச் சரிதையானது 417-பக்கங்கள் அடங்கியது. இஃது திருச்சினாப்பள்ளி அர்ச். சூசையப்பர் கலாசாலையில் பேர்பெற்று காலஞ்சென்ற பிரான்ஸிஸ் பில்லியர்டு சுவாமியார் அவர்களுடைய ஞாபகத்துக்காக, அவர்களுடைய கிறீஸ்துவ மாணாக்கர்களில் ஒருவரால் எழுதப்பட்டது. புஸ்தகம் வேண்டுவோர் மதுரை செண்ட் மேரிஸ் ஸ்கூல் உபாத்தியாயர் மகா-ள-ள-ஸ்ரீ சூசை கோவிந்தராவுக்காவது அல்லது நல்லாயன் அச்சியந்திரச்சாலை மானேஜருக்காவது எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். தபால்கூலி அன்னியில் இந்தியாவில் எந்த இடத்திற்கும் விலை 12-அணா; இதர நாடுகளுக்கு விலை ரூபாய் 1. சூசை கோவிந்தராவ், ஏஜண்டு, மதுரை.

சென்னப்பட்டணத்தில் கத்தோலிக்கருக்கு சத்திரம்.

சென்னப்பட்டணத்தில் கத்தோலிக்கருக்கு ஒரு சத்திரம் தேவையென்பது நெடுநாளாய் அனுபவித்துவந்த குறை. வெளியூரிலிருந்து வரும் கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்க விடமின்றி தவிக்கவேண்டியதாயிருப்பது எல்லோருக்குந் தெரிந்தவிஷயம்.

இக்குறையை நிவர்த்திக்க மயிலாப்பூர் மேற்றிராணியாருடைய அநுமதியின்பேரில் சங். எல். எக்ஸ். பெர்நாந்திஸ் சுவாமிகளின் தலைமை வகித்து ஒரு கமிட்டி சென்னையி லேற்பட்டிருக்கிறது. இக் கமிட்டியாரால் சிறுகச் சிறுக இதுவரையில் சேகரித்திருப்பது ரூ. 1,148—15—0 இத் தொகையைக் கொண்டும், கமிட்டி மெம்பரில் ஒருவருடைய கடன் கொண்டும் ரூ. 1,400 க்கு ஒரு சிறு இடம் வாங்கப்பட்டிருக்கிறது. இதில் ஒரு தக்க சிறு வீடாவது கட்டிமுடிக்க குறைந்தது ரூ. 5,000 ஆவது வேண்டும்.

இக்கருத்துக்காக கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்கள் தங்களால் கூடிய தொகையை அடியிற்கண்ட விலாசத்துக்கு அனுப்பி இப்பொதுநலக்காரியத்துக்கு உதவி புரிவார்களென கோரப்படுகிறது.

		ரூ.	அ.	பை.
எற்கெனவே வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை ...	...	1,448	15	0
பந்தர் தெருவு சுருட்டு வியாபாரிகள் (ஜூபிலீத்துக்கு) ...	...	30	0	0
ஆக மொத்தம்		1,478	15	0

Rev. Fr. L. X. FERNANDEZ, North Georgetown, Madras, E.



இதுவே தக்க சமயம்! விலையும் சரசம்!!
நாள் செல்லச் செல்ல விலையும் அதிகமாகும், ஆகையால் முந்துங்கள்.

வெள்ளை டுவில் கமிஸ், காக்கி டுவில் கமிஸ் ஒன்று ரூ 1¾, 2, 2⅛. கோடுவிழுந்த கலர் கமிஸ் ரூ 2, 2¼, 2½, 3. வெள்ளை ஸ்டிப் காலர், சாப்ட் போலோ காலர், டஜன் ரூ 4¼. வெள்ளை கைகுட்டைகள், டஜன் ரூ 2½, 2¾, 3. கலர்கரை கைகுட்டைகள் டஜன் ரூ 4½. வெள்ளை பனியன் ஒன்று அணா 14, ரூ 1, 1½, 2, 2½. போ. டய், ஆன்கர் டய், நெட்டிங் டய் ஒன்று அணா 12, ரூ 1, 1½, 2, 2½. கிரேப் பனியன் ஒன்று அணா 14, டுவில் வெள்ளை மப்லர் ஒன்று அணா 8, 10. மேஜோடுகள். ஜதை அணா 12, ரூ 1, 1½, 2. கிரிஸ்டிகேப் லெதர் பயிண்டிங் ரூ 4/2. பட்டு பயிண்டிங் ரூ 3/14. கல்கத்தா அமண்டாபேட் நேர்த்தியான 6, 6½ முழம் கரை வேஷ்டிகள் ஜதை ரூ 5½, 6, 6½. சாய வேஷ்டிகள் ஜதை ரூ 4¾, 5, 5½, 6. வெள்ளை சரிகை அங்கவஸ்திரம், தலைகுட்டை ஒன்று ரூ 7 முதல் 15 வரையிலும். கொரனாட் பட்டுசேலைகள் 27 ரூ முதல் 45 வரையிலும். கொரனாட்டுதுணி சேலைகள் ஒன்று ரூ 9 முதல் 12 வரையிலும். இங்கிலீஷ் சீட்டிசேலைகள், புட்டாசேலைகள், சிகப்பில் கரை நீலம் கட்டிய சேலைகள் ஒன்று ரூ 7, 8. வெகு நேர்த்தியான கல்கத்தா கரை வெள்ளை சேலைகள் ஒன்று 4, 4½, 5. அமண்டாபேட் சேலை ரூ 6, 6½. மதுராசில் நெய்யும் பட்டும் நூலும் கலந்த வாழைப்பூசேலை பட்டுமுந்தாணி ரூ 9½. டைமன்கோடு சேலை ரூ 9½. சிலேட்கலர் சேலை ரூ 9. வெங்காயசேலை ரூ 9. கருப்பு சேலை முந்தாணி பட்டு ரூ 9½. நயமான சேலை, ரூ 6, 6½, 7, 8, 8½. பனாரஸ் பட்டுசேலைகள் ஒன்று ரூ 28 முதல் 50 வரையிலும். கல்கத்தா பம்பாய் பட்டுசேலை ரூ 25, 30, 35. புதுச்சேரி பட்டுசேலை ரூ 18, 20, 21. புதுச்சி பட்டுகுட்டை ரூ 5½. பெங்களூர் குட்டை பட்டு 5½ முழம், ரூ 12, 15. கல்கத்தா வெள்ளை பட்டு அங்கவஸ்திரம் 6 முழம் ரூ 12. நரை ரோமத்தை கருமையாக்கும் (மார்னிங்ஸ்டார் என்னும் கருப்பு பஷ்பம்) பெட்டி ரூ 1. பாடசாலைக்குவேண்டிய நோட் புஸ்தகம். டிராயிங் புஸ்தகம், பென்சல், ரப்பர், மைபுட்டி, பேனா இவைகள் டஜனாகவும் கிரோசாகவும் அனுப்பப்படும். வேதசாமான்கள் :—இருதய ஆண்டவர், தேவமாதா, குழந்தையோடு மாதர், சூசையப்பர், அந்தோனியார். லூர்துமாதா சுரூபம் 16 இஞ்ச் ரூ 10. 1 அடி ரூ 6. 8 இஞ்ச் ரூ 3¾. 6 இஞ்ச் ரூ 2-அணா 2. இருதய ஆண்டவர் போட்டோ படம் 10″ × 12″ ரூ 2. இருதய ஆண்டவர் போட்டோ புஸ்தக படம் டஜன் அணா 11. குழந்தை திரேஸ் அம்மாள் போட்டோ புஸ்தக படம், டஜன் அணா 11. ரூல்போட்ட எழுதும் காயிதம் பாக்ட் அணா 10. ரூல் இல்லாத பாக்ட் அணா 14. லெட்டர்பேப்பர் பாக்ட் அணா 14. என்விலோப் 100. அணா 12, 14, ரூ 1, 1¼. அச்சடிப்பதற்கு வேண்டிய லெட் பிளாக்குகளும், ரப்பர்ஸ்டாம்புகளும். டைகளும், பிரின்டிங்களும். சுத்தமாய் செய்தனுப்பப்படும். பீட ஜோடினைக்குவேண்டிய பலவித புஷ்பகொத்துகளும் உத்தரியங்களும், அவரவர் ஆடர்பிரகாரம் டஜனாகவும், கிரோசாகவும் செய்தனுப்பப்படும். 10 ரூ சாமான் வரையில் V. P. அனுப்பப்படும். 10 ரூபாயிக்கு மேற்படும் சாமான்களுக்கு முன் பணம் அனுப்பினால் மாத்திரம் சமான் அனுப்பப்படும். பாக்கிங் சார்ஜ் பிரத்தியேகம்.

Messrs. MAY & Co., Royapettah, Madras.

LAGHIAM DEPOT.

No. 44. Namboolyar Street, Sowcarpet, Madras.

பூவுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத சிங்க பலத்தைத் தருவதெது?

அமிர்த சஞ்சீவி லேகியமும், அயக்காந்த செந்தூரமுமே.

இதை அவசியம் முழுதும் வாசியுங்கள்.

(முறையாய்ச் செய்த அயக்காந்த செந்தூரத்தைக் காட்டிலும், தேகபலத்தை தரும் ஔழதம் வேறொன்றுமில்லை.)

விளம்பரம்.

இதைக் கண்ணுறும் கனவான்களே!

இந்த லேகிய செந்தூரமானது சாமான்யமானதன்று; அபாரமான சத்துவத்தைத் தரக்கூடிய சக்தி அமைந்துள்ளது. உறுதியாய் இதை நம்பி ஒரே தடவை வாங்கியுண்ண எமது மருந்தின் விசேடகுணம் நன்கு விளங்கும்.

இந்த லேகிய செந்தூரத்தால் நிவர்த்தியாகும் முக்கிய குணங்களாவன.

துர்நடத்தையா லுண்டாகும் 20-வகை மேகரோகங்கள், சூலை ரோகம், குன்ம ரோகம், பித்த பாண்டு, கைகால் முடக்கு, ஓடு வாய்வு, பித்த எப்பம், நெஞ்சு, தொண்டை எரிச்சல், வயிறு உப்பிசம், அஜீரணம், பசி யில்லாமை, தாது ஹீனம், தேக உளைச்சல், கண்ணில் நீர் வடிதல், சோம்பல், நித்திரை யில்லாமை, தலை சுழற்றல், நீர் இறங்கும்போது பொறுக்கமுடியாத வாதையைத்தரும் தந்திமேகம் முதலியவைகளை ஆச்சரியப்படத்தக்க விதமாய் நீக்கிவிடும். பயங்கரமான மேக வெட்டை சம்பந்தமான வியாதிகளை பத்தே வேளையில் முழுதும் குணமாக்கி சப்தநரம்புகளையு மிக முறுக்கேற்றி அபரிமிதமான ரத்த விர்த்தியைப் பெருக்கி சக்தியைத் தருவதில் இதற்கு மிஞ்சின லேகிய பஸ்பம் வேறொன்றுமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். இதல்லாமல் இளைத்த தேகத்தை புஷ்டியாக்கி தேக தடிப்பு, நகக்கண் வெளுத்திருத்தல் முதலிய வியாதியைக் கண்டித்து, தினந்தோறும் மலத்தைத் தாராளமாய்ப் போக்குவதில் இந்த லேகிய செந்தூரமே முதன்மையான தென்பதை எமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம். நிற்க இந்த் லேகிய செந்தூரமானது மேற்கண்ட வியாதிகளைக் கண்டிப்பாய் நிவர்த்தியாக்குமா என்னும் சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் 48-நாளாவது வாங்கியுண்ண இதன் அபார குணம் தெரியவரும். தவிர யாங்கள் இம் மகத்துவம் பொருந்திய லேகிய செந்தூரத்தை எவ்வளவு சிறப்பித்து கூறியபோதிலும் தகும். தவிர இதை நோய் உள்ளவரேதான் சாப்பிடவேணும் என்ற அவசியமில்லை. யாவரும் சாப்பிடலாம். நோய் உள்ளவர்களை விட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் லேகிய செந்தூரத்தை யாதும் பத்தியமின்றி சாப்பிட சாவளவும் துற்பலமே எற்படாது. இது சத்தியம். தருவித்து எண்ணிக்கையாக சாப்பிட்டு 10-நாளைக்குள் குணம் தராவிடில் உடனே தெரியப்படுத்தினுல் கட்டாயம் வாங்கிய பணம் வாப்ஸ் செய்யப்படும். தவிர மேர்காட்டிய நோய் உடையோர் 48-நாள் சாப்பிடுவார்களேயானுல் முழுதும் குணமாவார்கள். அப்படி குணம் தராவிடில் யாங்கள் உத்திரவாதியாவோம். அதாவது யாங்கள் இவ்வளவு அருமையான லேகிய செந்தூரத்தை எவ்வளவோ சிரத்தையுடன் நல்ல பெயர் வாய்க்கும்பொருட்டு கொஞ்சமேனும் திரேக சிரமம் பாராமல் எம்மால் கூடிய வரையில் கஷ்டப்பட்டு முடித்து பரோபகார்த்தமாக ஜனங்கள் வாங்கியுண்டு திரேகத்தை பொன்மய மாக்கிக்கொண்டு நீடூழிகாலம் வாழ்வார் என்னும் அபிப்பிராயத்தால் உண்மையில் இதை வெளியிட்டோம். இந்த லேகிய செந்தூரமானது (போலிப்பண்டித போய்யர்களாகிய வைத்திய வாசனையே யில்லாத சில தாந்தோன்றி தம்பிரான்கள் பணத்தை கவரும்பொருட்டு வெளிப்படுத்தும் விளம்பரத்தில் இதுவும் ஒன்று என எண்ணவேண்டாம்.) இவ் வருமை வாய்ந்த லேகிய செந்தூரத்திற்கு பொன் மெடல், வெள்ளி மெடல் பெற்றதல்லாமல் ஆயிரக்கணக்கான யோக்கியதா பத்திரங்கள் பெற்றிருக்கிறோம். எமது லேகிய செந்தூரத்தை உண்டவர்

உடனே எமது கம்பெனிக்கு யாம் கோராதபடியே ஏஜண்டாய் நாடுவார்கள். இது உண்மை. அப்படி ஏஜண்டாய் சேருவோருக்கு மருந்துகட்கு மட்டும் 100-க்கு 25 கமிஷன் தரப்படும். அப்படி ஏற்பட்டபோதிலும் மாதத்திற் கொருவிசை கணக்கு பைசல் செய்யப்படும். எமது லேகிய செந்தூரமானது யாம் சொன்ன வரையில் குணத்தைக் கொடுக்கிறது என்றதைப்பற்றி எத்தனைதரம் பிரமாணம் செய்யச் சொன்னபோதிலும் காத்துக்கொண்டிருக்கிறோம். இது உண்மை. ஒரேதரம் தருவித்து பாரும். எமது உண்மை நன்கு விளங்கும்

வாதாதிக்க தோஷத்தினாலாவது. துரப்பியாசத்தினாலாவது, அதிக மனக்கவலையினாலாவது, அழக்கடி உண்டாகும் நோயினாலாவது, ஸ்திரீ வியாதியினாலாவது, மற்றெந்தக் காரணத்தினாலாயினும் பலமிழந்தவர்கள் எண்ணிக்கையாக ஷ பண்டிதருடைய லேகிய செந்தூரத்தை புசிப்பார்களானால் தேகாரோக்கியம், வலிவு, அழகு முதலியது பெற்று ஆநந்தத்தில் மூழ்கும்படிச் செய்யுமென்பதில் தடையே யில்லை.

வெளியூர் கனவான்கள் இந்த லேகியத்தில் முழுநம்பிக்கைவைத்து ஒரே வொருதரம் பரீக்ஷிப்பார்களானால், அவர்கள் அடையும் ஆநந்தத்திற்கு அளவேயில்லை. லேகிய செந்தூரத்தினாலுண்டாகும் அற்புத குணத்தைத் தெரிந்துகொண்டபின் நமது லேகியத்துக்குச் சிபார்சு செய்யும்படி உங்களை நாம் கேட்டுக்கொள்ளாமலே உங்கள் பந்துக்கள், நேசர் முதலியவர்க்கு நீங்களே ஷ பண்டிதருடைய லேகிய பஸ்பத்தின் சிறந்த குணத்தையும், நீங்கள் அதனாலடைந்த ஆனந்தத்தையும் எடுத்துக்கூறி சிபாரிசு செய்வீர்கள் என்பது நிச்சயம்.

இந்த லேகிய செந்தூரத்திற்கு பத்தியமே கிடையாது. சகலமும் நீக்குதலின்றி மருந்து சாப்பிடும் காலத்தில் வயிற்றிற்கு துரோகம் செய்யாமல் சாப்பிடவேண்டியது. ஏனென்றால் பசி அதிகமாய் எடுக்கும். பச்சைப்பயறு கொழம்பு, தயிர், பால், கறி, மார்க்கண்ட சூப்பு, நெய் இவை அதிகமாய் தேகத்தை தணிக்கக்கூடிய விதமாய் தாமதம் செய்யாமல் சாப்பிட்டு வரவேண்டியது. பசிக்கும்போதெல்லாம் பலகாராதிகள் சாப்பிடல் வேண்டும். தயிர், பால், நெய் முதலியவைகள் எருமைப்பால், பசும்பால், ஆட்டுப்பால் எதுவாயிருந்தாலும் சந்தேகமின்றி சாப்பிட்டு வரலாம்.

இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரத்தை மட்டும் ஒருவர் தருவித்து எண்ணிக்கையாக 48-நாள் சாப்பிடுவார்களேயானால் அது தேகத்தில் ஊற ஊற, மேகமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி தேகமானது வலுத்து புதியரத்தம் பரவி தன் வாழ்நாள் பரியந்தம் தேகமானது இளைக்காமல் முற்றிலும் அக்களிப்போடு ஆஜானுபாஹுவாய் விளங்குவார். இதை புருஷன் பெண்சாதி இருவர் ஏக காலத்தில் ஒற்றுமையாய் சாப்பிட்டு வந்தார்களேயானால் உதிக்கு மக்கள் யாதொரு நோய் இல்லாதபடி ரொம்பவும் தேஜசாய் தோன்றுவார்கள். இதைப்பற்றிப் பிரமாணமாய் சொல்லுவோம். நல்ல வாலிபதசையைக் கட்டாயம் அடைவார்கள். இது உண்மை. இதைப் பற்றி இன்னும் எழுதமுடியாது.

24-நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் செந்தூரமும் விலை ரூ 1—12—0.
போஸ்டேஜ் அணா 4.
ஒரே காலத்தில் 48-நாள் மருந்து வாங்குவோர்க்கு போஸ்டேஜ் இனாம்.

சர்வதேள் விஷ சஞ்சீவினி.

(ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்)

பட்டவுடனே விஷம் பறக்கும்! அழுதவன் சிரிப்பான்!!

இதில் குணமில்லையென்று நிரூபிப்பவர்க்கு 100-ரூபாய் பரிசளிக்கப்படும்.

நமது நாட்டிற்கு இது அவசியமாய் ஒவ்வொரு குடும்பத்திலும் சதா கையில் இருப்பாய் இருக்கவேண்டிய ஓர் ஔஷதமாகும். இது ஆங்கில யூனானித் தமிழ் வைத்திய நிபுணர்களால் நன்கு மதிக்கப்பட்டுள்ளது. நாள்பட வைப்பதால் குணம் சற்றும் குறையாது. தேள், நட்டுவாக்காலி, செய்யான், பாம்பு, எலி முதலிய விஷங்களை இரண்டொரு நிமிஷங்களில் அடியோடு நீக்கக் கூடியது. எண்ணிறந்தோர் இதனால் சுகமடைந்தது பிரத்தியட்ச அனுபவமானதால் இதைப்பற்றி நாம் அதிகம் கூறவில்லை. இது இரண்டு வித மருந்துகளடங்கியது. உபயோகிக்கும் முறை மருந்தோடு அனுப்பப்படும்.

விலை :—இரண்டுவித மருந்தும் அடங்கிய பாக்கெட் 1-க்கு ரூ 0 8 0
ஷ தபாற்கூலி 0 3 0 டஜன் 1-க்கு ரூ 5 0 0
ஏக காலத்தில் 2-பாக்கெட் வாங்கினால் தபாற்கூலி இனாம்.
வர்த்தகர்களுக்கு 100-க்கு 25 கமிஷன்.

எமது விலாசம் :— **லேகியம் டிபோ,**
நெ. 44, நம்புலையர் வீதி, சௌக்கார்பேட்டை, மதராஸ்.